சந்தாதாரி விலை ஆண்டு 0—1—6
Reg. No. M. 3066. 1937-ஆம் ஆண்டு 1.
PAHUTHARIVU ("REAON")

மலர் 3. இதழ் 4.



குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

1	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஎன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (கான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ.ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிடஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம்அல்லது கைவல்யம்கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

—)O(—

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. ஆகஸ்டு 1. { இதழ் 4.

அறிவின் செயல்.

[சுத்தமல்லி அ. சிதம்பரநாத பாவலர்.]

இராகம்—செஞ்சுருட்டி—தானம்—ஆதி

"செந்தூர் வேலாண்டி" என்றமெட்டு.

பல்லவி.

அறிவே பிரதானம் எவர்க்கும் பகுத்
தறிவே பிரதானம் (அறிவே)

அனுபல்லவி.

ஆய்ந்து பார்க்குஞ் சுடரே
எவர்க்கும் பகுத்தறிவே பிரதானம் (அறி)

ROJA MUTHIAH,
47, HOSPITAL ROAD
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

பருத்தறிவு

தொடக்.

அன்பு வமைதிகாத லின் பச்சுவை நிலவத்
துன்பமகலப் பணிக் கன்பர்க்கனை யெழுப்பு (அ)
அணிகலனித்து வெனப் பணிபவ ருலகுமுன்
ணணிசெல மணிதருள் மணியெனப் புகழ்பெரு (அ)

சரணம்.

(1) நெறியின் முறைபைக் காட்டும்
நேசிப்போர்க் கின்பழூட்டும்
நிந்தனை தருந் துயர்நி பந்தனை தவிர்க்குமுயர்
சிந்தனை முளைத்திடுவி தந்தனைப்படைத்த பருத் (தறி)

(2) துருவித் துருவிச் செல்லுற்
தூயவழியில் வெல்லும்
துட்டர்களுங் கெட்டுழல விட்டுவிடாக் கட்டவினைப்
பட்டவர்கள் நட்டமாத் தொட்டசுகங்கிட்டு பருத் (தறி)

(3) இருள்மலி வாழ்வைப்போக்கி
இசைபொழி வாழ்வுண்டாக்கி
இருதரத்தவர்களு மொருவித பயன்பெறு
முருகுறு நிபந்தனைப் பெருமையைத்தரு பருத் (தறி)

(4) புதுப்புது இன்பம் உய்யும்
பொதுவுடமையைச் செய்யும்
பொழில் பெறு நியதிநல் வழியெனப் புகழ்புனை
அழிவிலாவிறல் சூடு எழிலினையுள பருத் (தறிவே)

நல்வழி எது?
போராசை மூட நம்பிக்கையா?

(இங்கர்சால்)

VI

பல்லாயிர வருஷகாலம் தம்மாலாகாத காரியங்களைப் பெற மக்கள் கம்பி வந்தார்கள். இரசாயனத்துறையில் இரும்பைப் பொன்னாக்கும் வழியைக் கண்டுபிடிக்க மக்கள் வெகு காலம் முயன்று வந்தனர். இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதத்தில் வார்டு பேக்கனுங்கூட நம்பிக்கை கொண்டிருந்தார். பல்லாயிரக்கணக்கான மனிதர், பன்னூற்றாண்டுகாலம் இரும்பையும், ஈயத்தையும் பொன்னாக்கப் பல்லாயிர வழிகளில் இடையறாது முயன்று வந்தனர்.

பொருள்களின் உண்மைத் தத்துவங்களைப்பற்றிய ஞானம் அவர்களிடம் சூனியமாகவே இருந்தது. .ஏதோ ஒரு மந்திர சக்தியினாலே இரும்பும் ஈயமும் தோற்றுவிக்கப்பட்டன என்றும், எனவே வேறொரு மந்திர சக்தியினால் அவைகளைப் பொன்னாக மாற்றி விடலாமென்றும் அவர்கள் எண்ணினர். அவர்கள் எல்லாம் தெய்வீக சக்தியில் நம்பிக்கையுடையவர்களாயிருந்தனர். இடையறாது சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு சக்தியில் அவர்களுக்கு அழுத்தமான நம்பிக்கை இருந்து வந்தது. எனவே சில குச்சிகளை இணைத்து ஒரு யந்திரமுண்டாக்கி இடையறாது வேலை செய்யும் ஒரு சக்தியுண்டுபண்ணலாமென்று அவர்கள் நம்பினர்.

அம்மாதிரி ஒரு யந்திரமுண்டுபண்ண ஆயிரக்கணக்கான அறிவாளிகள் முயன்று பார்த்தனர். சக்தி நித்தியமானதென்றும் அதனை உண்டு பண்ணவோ, அழிக்கவோ முடியாதென்றும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. சதா சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு யந்திரம் ஒரு தனிப்பிரபஞ்சமோ அல்லது இந்தப் பிரபஞ்சத்துக்கு வேறானதோ ஆகிவிடாதென்றும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனினும் அக்காலத்த

வரால் அறிவுடையோராய் மதிக்கப்பட்ட பலர் இடையறாது இயங்கும் ஒரு சக்தியைக்கண்டுபிடிக்க முயன்றுகொண்டே இருந்தனர்.

தேச மக்களின் விதியையும், தனி நபர்களின் வாழ்க்கை ரகசியங்களையும் அறியலாம் என்ற நம்பிக்கையுடன் நமது முன்னோர்கள் நட்சத்திரங்களை ஆராய்ச்சிசெய்து வந்தனர். தேசங்களின் சுபிக்ஷத்துக்கும் கொள்ளை நோய்களுக்கும் மற்றும் காரியங்களுக்கும் சூரிய சந்திர கிரகணங்களும் இதர கிரகங்களின் பரஸ்பர சம்பந்தமும் எனி நட்சத்திரங்களுமே காரணமென்று அவர்கள் நம்பி வந்தனர். ஜோசியம் ஒரு விஞ்ஞான சாஸ்திரமாகவே மதிக்கப்பட்டு வந்தது. எனவே போர்வீரர்களும் ராஜ்ய தந்திரிகளும் ராஜாக்களும் ஜோசியர் யோசனைப்படியே காரியங்கள் நடத்தி வந்தனர். ஒரு நட்சத்திரம் காட்டியவழியே சென்று கிழைத்தேச ஞானிகள் கிறிஸ்து பிறந்த இடத்தைக் கண்டு பிடித்த கதைகட்டி விட்டவன் ஜோசியத்தில் நம்பிக்கையுடைய ஒருவனாகவே இருக்கவேண்டும். ஜோசிய ஆராய்ச்சியில் மக்கள் செலவு செய்த காலத்தையும் சிரமத்தையும் வரையறுத்துக்கூற முடியவே முடியாது. ஜோசியத்தில் நம்பிக்கைவைத்திருந்தவர்கள் நாம் ஒரு விநோத உலகத்தில் வாழ்கிறோமென்றும் அங்கே காரணகாரியங்களுக்குள் பரஸ்பர சம்பந்தமில்லையென்றும் மந்திர சக்தியினால் யாவும் சாதிக்கலாமென்றும் எண்ணினர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டு இறுதியிலுங்கூட ஜோசியத்தில் நம்பிக்கையுடையவர்கள் இருந்துதான் வருகிறார்கள்.

இடையறாத சக்தியையும், ரஸவாதத்தையும், ஜோசியத்தையும், தெய்வீகத்தையும் நம்பியதற்கு அவர்களது அறியாமையே காரணம்.

இயற்கைக்கு மேலான சக்தி ஒன்று இருப்பதாயும் அந்த சக்தியே சிருஷ்டி கர்த்தாவென்றும் அவனே பிரபஞ்சம் முழுமைக்கும் நாயகன் என்றும் மதவாதி நம்பினான்.

இரும்பைப் பொன்னாக்கும் பொருள் ஒன்று இருப்பதற்கு ஆதாரமில்லாமலிருப்பது போலவே இயற்கைக்கு மேலான திவ்ய சக்தியொன்று இருப்பதற்கும் ஆதாரமில்லை.

அழியா இளமையோடிருக்கவும் நமது முன்னோர்கள் முயன்று வந்தார்கள். நித்திய இன்மையை அளிக்கும் ஊற்று ஒன்று இருப்பதாயும் அந்த ஊற்று நீரைக்குடித்தால் யாவரும் கரை திரை மூப்பின்றி வாழலாமென்றும் அவர்கள் நம்பினார்கள். அவர்களெல்லாம் தெய்வீகச் சக்தியில் நம்பிக்கை யுடையவர்களே.

VII

ஆசிரியர் தமது அபிப்பிராயங்களுக்கு ஆதாரங்களைக் காட்டுவதிற்குப் பதிலாக ஆட்களின் பெயரைக் கூறுகிறார்கள். காலஞ்சென்ற பெரியார்களைப் பின்பற்றுவது அவர்களுக்கு மிக்க திருப்தியளிக்கிறது. ஒவ்வொரு மதத்துக்கும் ஒரு கூட்டம் ஞானிகள் இருந்து வருகிறார்கள். மதக்கொள்கைகளைப்பற்றி விவாதம் நடத்தும்போது மதாசிரியர்கள் அந்த ஞானிகளையே ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

பைபிள் கடவுள் வாக்கு என்பதற்கும் கிறிஸ்து தேவகுமாரன் என்பதற்கும் போர்வீரர்களும் ராஜ்ய தந்திரிகளும் அரசர்களும் கூறிய அபிப்பிராயங்களை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். நரக சுவர்க்கங்கள் இருந்து வருவதற்கும் அத்தகைய ஆதாரங்களையே காட்டுகிறார்கள். அவர்கள் கூறிய அபிப்பிராயம் தப்பு என்று சொன்னால் "ஐசக் நியூட்டனும் மாத்யூ ஹேலும் எங்களை ஆசரிக்கிறார்களே! அவர்களைவிட நீ புத்திசாலியா?" எனக் கேட்கிறார்கள். நம்முடைய நாட்டில் நமது ஆபாசக்கொள்கைகளை ருசுப்படுத்துவதற்கு வெப்ஸ்டரையும் மற்றும் பெயர் பெற்ற ராஜ்ய தந்திரிகளையும் பாதிரிமார் சுட்டிக்காட்டி அவர்கள் தம்மை ஆதரிப்பதாக கூறுகிறார்கள். அவர்கள் எல்லாம் பெரிய மேதாவிகள் என்பது அந்தப்பாதிரிமாரின் நம்பிக்கை.

ஆனால் அவர்கள் எல்லாம் கத்தோலிக்க மதத்தில் நம்பிக்கை வைத்து இறந்த பல பெரியார்களைவிடக் குறைந்த அறிவுடையவர்கள் என்றும் உத்தரக்கிரியைப் பிரசங்கம் செய்வதில் போசுவுக்கு அவர்கள் ஈடானவர்கள் அல்ல வென்றும் அவர்கள் எழுதிய கடிதங்கள் பாஸ்கல் கடிதங்களைப்போல் அவ்வளவு அழகானவை அல்லவென்றும் திருச்சபை அமைப்பில் டோக்கிமேடா அவர்களைவிடத் திறமையுடையவர் என்றும் கொலைச்சூழ்ச்சி செய்வதில் காதரைபின்டி மெடிசிக்கு அவர்கள் நிகரானவர்களல்லவென்றும்

புராடஸ்டண்டுகள் சந்தோஷமாக ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வாறு ஒப்புக்கொண்ட பிறகும் போப் ஒரு வெட்கங் கெட்ட பாசாங்குக்காரன் என்றும் கத்தோலிக்க மதம் கொடிய மதம் என்றும் புரோடஸ்டண்டுகள் பிடிவாதம் செய்கிறார்கள்.

உலகப் பெரியார்களாக மதிக்கப்பட்ட பலர் பல விஷயங்களில் தப்பாக மதிக்கப்பட்டிருக்கிறார்கள். லார்டு பேக்கன் கர்ப்பர்னிக்கின் வானசாஸ்திரக்கொள்கைகளை மறுத்து இறக்கும்வரை நட்சத்திரங்களும் சூரியனும் இந்த உலகத்தைச் சுற்றிவருவதாக நம்பியிருந்தார். மாத்யூஹேல் பேய் பிசாசுகளில் திடமான நம்பிக்கையுடையவராயிருந்தார். மக்கள் செய்யும் பாவமே பூகம்பத்துக்குக் காரணமென்றும் கிறிஸ்துவை நம்பினால் பூகம்பத்தை நிறுத்தலாமென்றும் ஜான் வெஸ்லி நம்பியிருந்தார். வேதங்களின் புனிதத்தன்மையைக் காப்பாற்றுவதற்கு கொலை ஒரு வழியென்று ஜான் கால்வின் நம்பியிருந்தார். காலியோ மோசேயின் வான சாஸ்திரக்கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை; எனவே காலிலியோ ஒரு மடையன் என்று மார்ட்டின் லூதர் அபிப்பிராயம் பட்டார். லிவ்ஸ்டர் அடிமை வர்த்தகத்தை ஆதரித்தார்; வோட்டுப்பெறுவதற்காக பாதிரிமாரைப் புகழ்ந்தார்.

VIII

பெரியார்களின் மடமைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் விளக்கி எத்தனை நூல்கள் வேண்டுமானாலும் எழுதலாம்.

கொஞ்ச காலத்துக்குமுன் உண்மையான பெரியார்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்டார்கள்; சிறைப்படுத்தப் பட்டார்கள்; எரிக்கப்பட்டார்கள். இவ்வண்ணம் "பெரியார்"கள் எல்லாம் திருச்சபையை (Churche) ஆதரிக்குமாறு முயற்சி செய்யப்பட்டது.

ஆனால் அந்தப் "பெரியார்"களின் உண்மையான அபிப்பிராயம் எது என்று ஒருவராலும் உறுதியாகக் கூறமுடியாது. அவர்கள் சொன்னதுதான் நமக்குத் தெரியும். அந்தப் "பெரியார்"கள் தம் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டியவர்களாயிருந்தார்கள். சிறை புகவும் அவர்கள் விரும்பவில்லை; அக்கினி குண்டத்தில் எரிக்கப்படுவதையும் அவர்கள் பிரியப்

படவில்லை. எனவே தம் நம்பிக்கைக்கு மாறாக அவர்கள் நடந்துகொண்டிருக்கவும் கூடும்.

பாதிரிமார் அவர்களை பார்த்து "எங்கள் மதத்தை ஆதரியுங்கள்; எங்கள் மதத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்யுங்கள்; இல்லையானால் நீங்கள் மரண தண்டனைக்கு ஆளாவீர்கள்" என்று சொன்னார்கள். மேலும் அவர்கள் மக்களைப் பார்த்து "இந்தப் பெரியார்கள் கூறுவதைக் கேளுங்கள்" என்று கூறினார்கள்.

கொஞ்சகாலம் நமக்குப் பேச்சு சுதந்தரம் இருந்து வந்தது. அதனால் பலர் தம் உண்மையான கருத்துக்களை வெளியிட்டு வந்தார்கள். அதன் பயனாய் இப்பொழுது பாதிரிமார் முன்னைப்போல பெரியார்கள் அபிப்பிராயங்களை ஆதாரமாக எடுத்துக்காட்டுவதில்லை. எனெனில் உண்மைப் பெரியார்கள் அவர்களை ஆதரிக்க வில்லை. தற்காலம் அறிவுலகத்தில் தலைமை ஸ்தானம் வகிப்பவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்களல்ல. அறிவுலகத்தில் வெற்றிக்கொடி காட்டிய ஹம்பால்ட்டு, ஹெல்ம் ஹால்டஸ், ஹெக்கல், ஹக்ஸிலி, டார்வின், ஸ்பென்சர், டின்டால் முதலியோர் பெயர்களை அஞ்ஞானவாதிகள், பகுத்தறிவு வாதிகள் இப்பொழுது வெகு தைரியமாய் தமக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார்கள். அவர்கள் எல்லாம் சிந்தனா சக்தியுடையவர்கள்; ஆராய்ச்சியாளர்; தமது அபிப்பிராயங்களை அச்சமின்றிக் கூறும் துணிச்சலுடையவர்கள். அவர்கள் ஒரு பொழுதும் பாதிரிமாரின் அடிமைகளாயிருக்க மாட்டார்கள்.

மக்கள் அறிவு வளர்ச்சியைத் தடுக்க அமெரிக்கக் கல்லூரித் தலைவர்களில் பெரும் பாலார் பன்னூற்றாண்டு காலம் முயற்சி செய்து வந்தனர். எனவே அக்கல்லூரி மாணவர்கள் எவரும் பெரிய விஞ்ஞான சாஸ்திரிகள் ஆகவில்லை.

தமது மதக் கொள்கைகளைப் பரப்புவதற்காக இப்பொழுது வைதீகர் உயிருடனிருக்கும் பெரியார்களின் அபிப்பிராயங்களை ஆதாரமாகக் காட்டுவதில்லை. அவர்களது பெரியார்கள் எல்லாம் மண்டோழிந்து போய் விட்டார்கள்.

காம் இன்று வேண்டுவது நியாயம், பெயர்கள் அல்ல; காரணம், அபிப்பிராயமல்ல. குருட்டுத்தனமாக ஒரு தனி மனிதனையோ, மதத்தையோ பின்பற்றுவது மானங்கெட்ட

செயலாகும். பகுத்தறிவுப்படி நடப்பதே கண்ணியமானது. உண்மையைக் கூறித் தோல்வி அடைவோனே வாழ்தவத்தில் வெற்றிக்கொடி நாட்டுபவன். குருட்டுத்தனமாகப் பிறரைப் பின்பற்றுபவன் அடிமை; சுயமாகச் சிந்தனை செய்பவன் சுதந்தரன்.

பெரும்பாலார் தங்களைச் சுற்றி இருக்கும் சார்புகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் முக்கியமாக உணர வேண்டும். அறிவாளிகள் பலர் முஸ்லீம்கள், இளமை முதலே குர் ஆன் நம்பிக்கையில் வளர்ந்தவர்கள்; தம் பெற்றோரிடத்து மத நம்பிக்கைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் எனவே மத விஷயங்களில் அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு மதிப்பே கிடையாது. அதுபோல கிறிஸ்தவ காட்டிலுள்ள அறிவாளிகள் அபிப்பிராயத்துக்கும் மதிப்புக் கொடுக்க முடியாது. அவர்களுடைய கம்பிக்கைகள் ஆராய்ச்சியையோ, சிந்தனையையோ பொறுத்ததல்ல; சுற்றுச்சார்புகளைப் பொறுத்த வைகளே.

மதங்கள் எல்லாம் அறியாமையின் பிள்ளைகளே.

ரோமர் ஆட்சி வீழ்ச்சியுற்று, செல்வம் ஒழிந்து, வர்த்தகம் குன்றி, அரசாட்சி தீரர் கையிலிருந்து கோழைகள் கைக்கு வந்து கலைகள் அழிந்து பூர்வீகர் வீரச்செயல்களைப் பற்றிய ஸ்மரணை மறைந்து ரோமர் தத்தளித்த காலத்து கிறிஸ்து மதம் தோன்றிற்று. "மண்ணுலக இன்பம் நிலையற்றது; வானுலக இன்பமே சாசுவதமானது" என உபதேசம் செய்தது.

கல்வி அழிந்தொழியாது இருந்திருந்தால், மக்கள் கல்விப் பயிற்சியுடையவர்களாயிருந்திருந்தால், கிரேக்க ரோம இலக்கியங்களை அவர்கள் கற்றிருந்தால், சாக்ரிலஸ், சோபதி லஸ் யூரிபிடிஸ் முதலியோருக்கு நேர்ந்த ஆபத்தை அவர்கள் உணர்ந்திருந்தால், கலைகளையும் மேதாவிகள் அற்புதக் கலையும் வெண் சலவைக்கல் பிரதிமைகள் உணர்த்தும் தாபங்களையும் கற்சிலைகள் தெரிவிக்கும் லக்ஷியங்களையும் அவர்கள் கிரகித்திருந்தால், ரோம சரித்திரங்களை அவர்கள் பயின்றிருந்தால், லாக்ரிட்டியஸ், சிஸரோ, சீசர் முதலியோர் கருத்துகளை அவர்கள் உணர்ந்திருந்தால், காலஞ்சென்ற பெரியார்களின் கம்பீரமான எண்ணங்களை அவர்கள் தெரிந்

மாணவருக்கு - பள்ளாட்சுதாவம்.

ஹலோ! ஆறாம் வகுப்பு மாணவர்களே!

இன்று உங்களுக்கு ஓர் விரிவுரை நிகழ்த்தும்படி என்னை கேட்டிருக்கிறார்கள். எனெனில் எங்கிலம், சோபோக்கிள்ஸ், யுரிப்பிடேஸ், ஷேக்ஸ்பியர் முதலியவர்களின் தொழிலில் நானும் பிரசித்தி பெற்றுவிட்டேன். எங்கிலம் கிரீக் பாணியில் எழுதினார். ஷேக்ஸ்பியர் ஆங்கில இலக்கியம் ஆவார். இவை ஓர் பள்ளிக்கூடப்பாடம்.

பிரான்சுப் பாடசாலைகளில் நான் ஆங்கில இலக்கியம். அதனால் எனது நாமத்தைக் கேட்டவுடன் ஆரம்வகுப்புக் கூளெல்லாம் திகைக்கின்றன. பயப்படவேண்டாம்: நான் ஆங்கில இலக்கியத்தைப்பற்றி பேசப் புகவில்லை.

நாடகமெழுதுவதில் எனக்கு ஓர் பிரயாசையுமில்லை. அதற்கேற்ற விருப்பம் இயற்கையிலிருந்தால் யாரும் எழுதலாம். அப்படியில்லாது எழுதல் முடியாது.

எப்படியிருந்தபோதிலும், இளைஞரை வசப்படுத்துவதற்கு என்னிடம் ஓர்உபாயமிருக்கிறது. நான் கிழவன்- உண்மையில் எண்பது வயதுக்கு மேற்பட்டவன். அத்துடன் என்

திருந்தால்—நிஜ்தவக் குருட்டு நம்பிக்கைகள் இந்தாலியாவிலே வேரூன்றி யிருக்கவே மாட்டா.

ஆனால் ஆதிகாலக்கிறிஸ்தவர்கள் கலைகளையும் காவியங்களையும் இன்பங்களையும் வெறுத்தார்கள்; மனிதசமூகத்தையே துன்மதித்தார்கள்; உலகத்தைக் கடவுள் சபித்திருப்பதாகவாதித்தார்கள்; மறு உலக வாழ்வைப் பெற மண்ணுலக வாழ்வைச் சாதகமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று போதனை செய்தார்கள்; கல்வி மக்கள் உள்ளத்திலே சந்தேகத்தை யுண்டு பண்ணுகிறதென்றும் விஞ்ஞான சாஸ்திரம் மக்களின் ஆத்மா கடவுளிடம் பதியாமல் தப்பு வழியில் செலுத்துகிறதென்றும் பிரசாரம் செய்தார்கள்.

னிடம் ஓர் நரைத்தாடியுமிருக்கிறது. இவ்விரண்டு காரணங்களும் புத்தியுடன் சம்பந்தப்பட்டமதனச் சிலர் நினைக்கிறார்கள்.

அது ஒரு பெரும்பிழை. ஒருவன் மடையனாய்ப் பிறந்தால், சீவியத்தில் வரவர மடைத்தனம் கூடிவருவதேயல்லாது திருத்தமாட்டான்.

உங்களின் சீவியத்தைப் பார்க்கிலும் கான்ஸ் மடங்கு கூடகான் ஜீவித்திருப்பதால், எனக்கு ஓர் அனுபவம் மாத்திரம் உங்களுக்கிருப்பதிலும் கூட உண்டு. சிறுவர்களையும் சிறுமிகளையும் கையிற்றூக்கிச் சென்றிருக்கின்றேன். அவர்கள் ஆறாம் வகுப்பில் கல்வி பயில்வதைப் பார்த்திருக்கிறேன். பின்னர் அழகும் இளமையும் நிறைந்தவர்களாகவும் அழகுப் போட்டியிலீடுபட்ட மணப்பெண்களாகவும், மணவாளராகவும், பின்னர் கடுவயதடைந்த குடும்பஸ்தர்களாகவும், வயது முதிர்ந்த கோலத்தையுடையவர்களாகவும்பார்த்திருக்கிறேன். ஈற்றில் அவர்களின் ஈமக்கிரியைகளுக்குஞ் சென்றிருக்கிறேன்.

நீங்கள் இதைப்பற்றி அதிகம் யோசிக்கமாட்டீர்கள். ஆனால் சற்றே கவனியுங்கள். உங்களுடன் பிறந்தும் மரணவர்களிற் சிலர் ஒருகாலம் துக்கப்படுவார்கள். உங்களால் அதிகம் குறைவாக மதிக்கப்படும் வேறு சிலர் வெகு விரைவிலாக மாறி உங்கள் காலத்தில் பெரியோர்களாக விளங்குவார்கள். ஆகையால் எப்பொழுதும் இளைஞருடன் சந்தோஷமாக கடந்துகொள்ளல் வேண்டும்.

இவைகளைப்பற்றிப் புத்தக ரூபமாக அல்லது தந்தையர் மூலமாக அறிவதில் யாதும் பிரயோசனமில்லை. தான் அறிந்திருப்பதுபோல் நீங்களாகவே ஆட்களை அறிந்துகொள்ளல் வேண்டும். இதுவே உங்களுக்கும் எனக்குமிருக்கும் விசித்தியாசம். நான் உங்களைப்போலிருந்த காலத்தில் உலகம் மாறுபடாதிருந்ததுபோல் தோற்றியது. ஒருவருடம் என்றால் நெடுங்காலம்போலிருந்தது. இப்போது நான் சுற்றிப் பார்க்க முன் வருடங்கள் பறந்துவிடுகின்றன. உங்களுக்குமுன்னால் இன்னும் ஐம்பது வருடங்கள் இருக்கின்றன. ஆகையால் நீங்கள் உங்கள் பின்ஜீவியத்தைப் பற்றியும் நடத்தையைப்பற்றியும் கவனமாகச் சிந்திக்க வேண்டும். எனக்கு இனிப் பின்ஜீவியமில்லையாதலால் எதைச்சொன்னாலும் செய்தாலும் காரியமில்லை.

நீங்கள் எல்லோரும் ஏறக்குறைய வளர்ந்து விட்டீர்கள். என்று நினைக்கிறீர்களல்லவா? உங்கள் வயதில் நானும் அப்படித்தான் நினைத்தேன். 81 வருடம் அவ்வாறு நினைத்திருந்துவிட்டு இப்போது பார்த்தால் நான் இன்னும் வளரவில்லையென்றே எண்ணுகிறேன். நீங்களும் இதே மாதிரித்தான்.

நீங்கள் பள்ளியை விட்டபின் உலகம் அதைக்காட்டிலும் பெரிய பள்ளியென்பதை மாத்திரமே கண்டு கொள்வீர்கள். பின்னரும் முதலாம் வகுப்பிலிருந்து படிக்கத் தொடங்குவதாகவே தோற்றும். ஆறாம் வகுப்புக்குப் போவதற்குமுன் நீங்கள் என்னைப்போன்று கிழவனாய் வருவீர்கள்.

ஆகவே இளமையிலேயே பள்ளிக்குச் செல்வது கஷ்டமாகும், பன்னிரண்டு வரைக்கும்ஒழுங்கு தெரியவேண்டும். குறிக்கப்பட்ட நேரத்தில் எழுந்து, சாந்திகள்செய்து, உடை தரித்து உணவருந்திச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்வதே பள்ளிக்கூட ஒழுங்கு அல்லது முறை.

ஆனால் இந்த ஒழுங்கு எல்லோருக்கும் பொருந்துமென எண்ணப்பட்ட போதிலும், அது ஒருவருக்காவது பொருந்தாது.

ஒவ்வொருவருக்கும் தேவையானது அவரவர் விருப்பத்துக்கேற்ற முறையே. ஆனால் அது பள்ளிக்கூடத்தில் கிடைக்கமாட்டாது. ஒவ்வொருவருக்கும் அவரவருக்கு இசைந்தவாறு ஆசிரியர்களையும் முறைகளையும் ஒழுங்கு செய்வதற்கு எவரிடமாவது காலமும் பணமும் போதியதாயில்லை.

ஆங்கிலேயர் ஜெர்மனியில் வசிக்கச் சென்றபொழுது ஜெர்மன் சப்பாத்து இரண்டு காலுக்கும் ஒரேமாதிரியாகவிருந்ததைக்கண்டு அதிசயமுற்றார்கள். அது இடது காலுக்கும் வலதுகாலுக்கும் ஏற்றதாகச் செய்யப்படவில்லை. இரண்டும்ஒரேமாதிரித்தானிருந்தன. எதனத்தக்காலுக்கு அணிந்துகொண்டாலுஞ்சரி. பாதமே அதைச்சரிப்பண்ணி நடந்துகொள்ளவேண்டும். ஆனால் உங்களில் எத்தனைபேர் வலதுகாலுக்கும இடது காலுக்கும் வித்தியாசமான காலுறைதைப்பித்து வைத்திருக்கிறீர்கள்? நான் சென்ற 50 வருடகாலமாக இரண்டுகாலுக்கும் வித்தியாசமான மேசுதான் உடம

யோசித்து வருகிறேன். சில தையற்காரர் அப்படிச்செய்ய முடியாதென உண்மையில்மறுத்துவிட்டனர். ஆனால் அதைப் பாருங்கள்! உலகத்தைச்சுற்றிப் பறக்கக்கூடிய யந்திரங்கள் எங்களால் செய்யக்கூடியதாயிருக்கின்றன. உலகம் முழுவதற்கும் பேசக்கூடிய யந்திரங்கள் செய்யக்கூடியதாயிருக்கின்றன. ஆனால் வலது காலுக்கும் இடது காலுக்கும் பொருத்தக்கூடிய விந்தியாசமான கால்மேசு தைக்க விடலாதா? நான் இதைச் செய்யக்கூடுமெனவும் செய்பவேண்டுமெனவுங் கேட்டதால் நான் ஓர் நூதனமான மனுஷனெனக் கருதிக்கொள்கின்றனர்.

நல்லது, பள்ளிக்கூட முறைகளும் கால்மேசுகளைப் போலவும் பழைய ஜர்மன் சப்பாத்துக்களைப்போலவும் இருக்கின்றன. அவைகள் இடதுமல்ல, வலதுமல்ல. அதன் பெறுபேறாக அவைகள் எவருக்காவது சரியாகப் பொருந்துவதுமில்லை.

ஆனால் நாங்கள் எப்படியாவது காலத்தைத்தழுக்கப் பார்க்கவேண்டும். நாங்கள் பாடசாலைகளைவிட்டு விரிந்த உலக வாழ்க்கையில் புகும்போது அதேக ஓழுங்குகளுக்கும் முறைகளுக்குமிடையில் எங்களுக்குத்தேவையானவைகளைத் தெரிந்தெடுக்க வேண்டும். கல்லூரிமுறை, பட்டாளமுறை, கடற்படைமுறை, நீதிமன்றமுறை, சிவில்சேவில்முறை, சட்டமுறை, எழுத்தாளர்முறை, நாடகசாலைமுறை, அல்லது எல்லாவற்றிலும் கேவலமான பாராளுமன்றமுறை, இவற்றில் ஒன்றைச் சேர்ந்துகொள்வதற்கு நீங்கள் பரீக்ஷைகளில் சித்தியெய்த வேண்டும்.

"சப்பல்கட்டை" என்பவர் யார்? இவர்தான் பழைய பரீக்ஷைவினாக்களெல்லாவற்றையும் மனனம்பண்ணிப் பரீக்ஷகர்களால் சரியென மதிக்கப்படும் விடைகளை ஆயத்தஞ் செய்துவைத்திருப்பவர்.

இந்த விடைகளை உண்மையான விடைகளென நீங்கள் நினைக்கக்கூடாது. பரீக்ஷகர்கள் வயதுபோனவர்களாகவிருப்பார்கள். அவர்களுடைய அறிவு உண்மையில் இக்காலத்துக்கேற்றதாக விருக்கமாட்டாது.

இக்காலத்தில் பரீக்ஷைகளில் சித்தியெய்வது கொர்பெனியஸ் காலத்தை ஒக்கும். நீங்கள் 20 வயதில் 50 வயதை

யடைந்த பரீக்ஷகர்களால் பரீக்ஷிக்கப் படுவீர்களாயின் 30 வருடங்களின்முன் கற்பிக்கப்பட்டவை என்னவென்னவென ஆராய்ந்தறிந்து, அவற்றை ஆயத்தம் செய்து வைப்பதெயல் லாது இக்காலமுறை பொருந்தாது. மனனம்பண்ணுபவர் பரீக்ஷைகளிற் சித்தியெய்வது சுலபம். ஏனெனில் பழைய கேள்விகளை மனனஞ்செய்து வைத்திருப்பார். பரீக்ஷகர்கள் ஒரு சிறு தொகை வினாக்களை வைத்துக்கொண்டு அவை களையே திருப்பித் திருப்பிக் கேட்பார்கள்.

சாஸ்திர சம்பந்தமான பரீக்ஷைகளில் இக்காலமுறை யான வினாக்களைக் கொடுத்தால், வயதுபோன பரீக்ஷகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் எல்லாப்பரீக்ஷை களும் அப்படியன்று. லத்தீன், கிரீக் பாஷைகள் கடற்படை அல்லது வைத்திய அனுபவ நூல்களைப்போன்று மாற்ற மடைவதில்லை. சமய சற்பனைகளும் இதுபோன்று கட்டாய மாக மாற்ற மடைய வேண்டுமாயினும், ஒருபோதும் மாற்ற மடைவதில்லை.

எப்படியிருந்தபோதிலும் பரீக்ஷை செய்யப்படும் பாடங் களில் நீங்கள் கொண்டிருக்கும் சுய அபிப்பிராயத்தை எழு வொண்ணாது. உங்கள் பரீக்ஷைகளைக் காட்டிலும் உங் ருக்கு கூடிய அறிவிருக்கட்டும்; ஆனால் அவ்வித அபிப்பி யம் உங்களிடமிருப்பதாக அவர்களுக்குக் காட்டக்கூடாது.

நீங்கள் ஒருமுறை பரீக்ஷையில் சித்தியெய்திவிட்டால், பின் ஜீவியத்தை முறையாக நடாத்தத் தொடங்குவீர்கள். அப்பொழுதுதான் பிழையான கல்விஉங்களுக்கு ஊட்டப்பட்டு விட்டதென்பதை உணர்வீர்கள். நீங்கள் தேகாப்பியாசத்தை யே பெரும்பாலும் கவனிப்பீர்கள். இது உங்கள் ஜீவியத்தை இருபது வயதளவில் முடித்துவிடும்.

நீங்கள் என்னை ஒரு கல்வியறிவுள்ளவனெனக் கருதலாம். ஏனெனில், சென்ற 60 வருடங்களாகக் கல்வியறிவுள்ள மனி தனின் தொழிலினாலேயே ஜீவித்து வருகிறேன். அப்படி யிருந்தபோதிலும எனது ஜீவியத்துக்குதவிய கல்வி எனக்குப் பாடசாலையில் ஊட்டப்படவில்லை

எனக்குத் தெரிந்தவரையில் எனது ஆசிரியர்கள் அவை களைப்பற்றிய அறிவு அற்பமேனு மில்லாதவர்களாக விருந்

தாங்கள். பள்ளிக்கூடம் என்பது எனக்குச் சிறைவாசம் போலிருந்தது.

பாருங்கள்! நான் ஓர் நூதனமான விருப்பத்துடன் பிறந்தேன். எனக்கு ஆங்கில இலக்கியத்திலுள்ள பல நூல்களைப் படிக்க விருப்பமிருந்தது. ஆனால் பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்ட புத்தகங்கள், எழுதத் தெரியாதவர்களால் எழுதப்பட்டிருந்தமையால் அவைகளைப் படிக்க எனக்கு விருப்பமில்லாதிருந்தது. கணிதம் என்னும் பாடத்தை ஓர் அருவருப்பான அறையில் படித்தேன். அகோரகணிதம் செய்யும்படி காட்டிவிடுவார்கள். எனக்கு ஒன்றும் விளங்காது. அவைகள் சாஸ்திரங்களுக்கு எவ்விதமாகச் சம்பந்தப்பட்டவை யென்பதும் ஒருபோதும் எனக்கு விளங்க வைக்கப்படவில்லை. ஆதலின், எனைய இலக்கிய பாண்டித்திய முள்ளவர்களைப்போல் நானும் எனது ஜீவியம் முழுவதும் கணிதத்தை வெறுக்கவேண்டியதாயிற்று. அப்படியிருப்பதினால் பள்ளிக்கூடங்களிலிருந்து அதிகம் நன்மைபெறக் காத்திராதீர்கள். நீங்கள் அபர்லாந்து கேசத்து இலவச கல்விப் பரீக்ஷையில் சித்தியெய்தக்கூடும். ஆனால் சர்வகலாசாலைப் பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு ஓர் வியாபார ஸ்தலமாவது வேலை கொடாதென்பதை அறியுங்கள்.

மற்றவர்களைப்போல் நடந்துகொண்டால், உங்கள் அபலவர்களுடன் காலங்கழித்துக் கொள்வீர்கள்; ஆனால் அவர்களின் மடமைத்தனத்தாலும் மனக்கொதிப்பினாலும் வருந்துவீர்கள். அவைகளைத் தவிர்த்து நடந்தால் அவர்களின் விருப்பயினத்திற்கும் துன்மதிப்புக்கு மாளாவீர்கள்.

உங்களை வெறுத்து நடப்பவர்களுக்கு நீங்கள் நன்மை செய்யத் தண்டிக்கப்படாது. ஏனெனில் அவர்கள் உங்களுக்குக் கடமைப்பட மறந்துவிடுவார்கள்.

இவைகளைப்பற்றி இன்னும் அதிகம் உங்களுக்கு நான் கூறக்கூடும்; ஆனால் நேரமாய்விட்டது. நிறுத்தும்படி எச்சரிக்கையும் பிறந்து விட்டது. இது உங்களுக்குத் திருப்தியாயிருக்குமென நம்புகிறேன்.

(ஈ. கே.)

ஜோஸப் ஸ்டாலின்.

(தோழர் C. V. K)

இன்றைய உலகின் கவனத்தை சர்வாதிகாரிகள் ஈர்த்து வருகின்றனர். உலகெங்கணும் சர்வாதிகளைப் பற்றிய பேச்சுதான் பேசப்படுகின்றது. இன்று உலக கவனமனைத்தும் ரஷியாவின் பக்கம் சென்றிருக்கிறது. அக்காட்டின கொள்கை களை ஒரு சிலர் தவறெனக் கூறுகின்றனர். பிறிதொருசாரார் அதன் கொள்கைகளை புனிதமான தென்கின்றனர். இதற் கிடையில் ரஷியாவின் அரசியல் முறையை ஒழித்து விடுவோ மென கங்கணங்கட்டிக் கொண்டிருக்கின்றனர் எகாதிபத்திய வெறிகொண்டோர்கள். எல்லாவற்கு மத்தியில் போர் வெறி கொண்ட ஜப்பான் ரஷியாவோடு ஆக்ரமிக்கிறது. இத்தனை கோலங்களுக்குமிடையே ரஷியாநாடு இன்று மௌனஞ் சாதித்து வருகின்றது. இந்த நாட்டிற்கு சர்வாதிகாரியான ஜோஸப் ஸ்டாலின் என்பாரைப்பற்றி இக்கட்டுரையில் சுருக் கமாகக் கூறுவோம்.

ஆழமுள்ள தண்ணீர் சாந்தமாக ஓடிக்கொண்டிருக்கும் என்று ஓர் ஆங்கிலப்பழமொழி உண்டு. அதே போன்று ஸ்டா லின் மௌனஞ்சாதித்து வருகின்றார். அவரது சாந்தத்தில் பல இரகசியங்கள் உண்டென்பது மாத்திரம் நிச்சயம். ரஷி யாவின் தத்துவ ஞானத்திற்கு ஸ்டாலினுடைய கம்பீரமும், தோற்றமும், நடவடிக்கைகளும் அசைக்கமுடியாத இருமபுத் தூண்களாகும். உலகிலேயே மூட நம்பிக்கை, பாமரத் தன்மை, மத வைராக்கியம் முதலியவைகளுக்கு ஒருகாலம் அஸ்திவாரமாயிருந்த ரஷியாவில் ஸ்டாலினுடைய நிர்வாக முறை நவீன முறையில் மாற்றப்பட்டிருப்பது அவரது சாதுர் யத்தை நன்கு காட்டுகிறதல்லவா?

ஸ்டாலின் கோரி (Gori) என்ற பட்டணத்தில் 1879 ம் வருடம் பிறந்தவராகும். இவரது முழுப்பெயர் ஜோஸப் விஸ ரினாப் ஸ்டாலின் (Joseph Wisserinoff Stalin) என்பதா

கும். டிஜுகாச்சுலூலி (Djuguchuilly) என்ற இடத்திலுள்ள ஓரு விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவராகும் ஸ்டாலின். அங்குள்ள விவசாயிகளிடையே இவரது தகப்பனார் செருப்பு (சப்பாத்து) வியாபாரம் செய்து வந்தனர். ஸ்டாலினும் செருப்புத்தைக்கும் வேலையில் ஆரம்பத்தில் அமர்ந்தனர். ரஷிய விவசாயிக்கும், ரஷிய ஆலைத்தொழிலாளிக்குமிடையே இவரது வாழ்க்கை நிலவியது. அக்காலத்தில் மூன்றாம் அலக்ஸாந்தர் சக்கரவர்த்தி எகாதிபத்தியத்தை வலியுறுத்தி போதனைகள் செய்வதற்கு ஓரு புரோகிதர்கள் (பாதிரிகள்) அடங்கிய கூட்டத்தை நிர்மாணித்தனர் இதில் மதம், கடவுள் ஆகியவைகள் சம்மந்தமான சாதகப் பிரசாரங்கள் கடத்தப்படலாயின. புரோகிதர்களைப் பழக்குவதற்கு பல கல்வி நிலையங்களை அலக்ஸாந்தர் ஸ்தாபித்தனர். ஸ்டாலின் தனது 15-வது வயதில் மேற்கூறிய கல்வி நிலையமொன்றில் சேர்ந்தனர். ஸ்டாலின் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டவுடன் மார்க்ஸ் சித்தாந்தத்தின் மொழி பெயர்ப்பு அவர் கையில் எப்படியோ கிடைத்தது. இந்தப் புத்தகம் அவரது கவனமனைத்தையும் கவர்ந்து விட்டது. இந்த நூலிலுள்ள விஷயங்களை தெளிவாக விளங்கிக்கொண்டனர். இதன் போதனைகளை இவர் கிரியாம்சையில் கொண்டுவர முற்பட்டனர். தன் சகாக்களிடம் இந்நூலின் தத்துவங்களை விபாக்யானிக்கவும் அனுதப்போதிக்கவும் முன்வந்தனர். இலவச கல்வி நிலைய அதிகாரிகள் அறிந்தவுடன் அவரை பள்ளியிலிருந்து விலக்கி விட்டனர். அப்போது அவருக்கு வயது 19 ஸ்டாலின் ஜார்ஜியா நகரின் தலைமைப் பட்டணமாகிய டைபிளிஸ் (Tiflis) என்ற இடத்திற்குச்சென்று செருப்பு தைக்கும் தொழிலைச் செய்துகொண்டே தனது பிரசார வேலையில் தீவிரமாக ஈடுபடலாயினர். இங்குள்ள ரயில்வே தொழிலாளர்களெல்லோரையும் இவர் ஒன்று சேர்த்தனர். இவரது தைரியத்தையும், சாதுர்யத்தையும் கண்டு தொழிலாளர் கட்சியார் வியந்தனர். ஸ்டாலின் மனோதைரியத்துடன் தனது கொள்கையைப் பிரசாரம் செய்துகொண்டே வந்தனர். இவரது திறமையைக்கண்ட தொழிலாளர் சமூகம் இவரை "சமதர்ம ஜனநாயத்துவ கட்சிக்கு" ஓர் அங்கத்தினராக தெரிவு செய்தனர். இந்தக்காலங்களில், போலீஸார் கல்லூரிகளில் படித்துவந்த தீவிர வாலிபர்களை கண்காணிப்பதில் முழுக்க வனஞ்செலுத்தியதால் அவரது இயற்கையான மனோ உற்சாகத்தோடும், புத்தி நுட்பத்தோடும் தனது வேலைகளை தங்குதடையின்றி செய்து வந்தார். என்றா

லும் 1902-ம் ஆண்டில் சிறைச்சாலைக்கு இவர் கெட்டிதத்தள் ளப்பட்டார். பிறகு இவர் ஸைபீரியாவுக்கு காடு கடத்தப்பட் டார்.

1903-ம் வருடம் சமதர்ம ஜனநாயகத்துவ கட்சியிலிருந்து லெனின் விலகி போல்ஷ்விக் கட்சியை ஸ்தாபித்தார். ஜோஸப் ஸ்டாலின் உடனே இவ்வபிப்பிராயத்தை மனமார ஆதரித்து விவசாயிகளையும், ஆலைத்தொழிலாளர்களையும் ஒன்று படுத்த விழைந்தார். ஆனால் இவ்வியக்கம் விவசாயிகளிடை யேயும், ஆலைத்தொழிலாளர்களிடையேயும்தான் இருக்க வேண்டுமென்ற விதி ஏற்படுத்தப்பட்டது. படித்த கூட்டத் தினரை நம்பி கொள்கையை நடத்துவது தவறெனக் கூறப் பட்டது. படித்த கூட்டத்தினர் தொழிலாளர்களின் நிலை களை சரிவர அறிய முடியாதென திட்டம் வகுக்கப்பட்டது. படித்த கூட்டத்தினரால் கைத்தொழில்களில் முதலாளித்து வம்தான் ஏற்படுமென மேற்கண்ட திட்டம் கூறியது. ஜர் மெனி, இங்கிலாந்து முதலிய தேசங்கள் இம்மாதிரி படித்த கூட்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பதால்தான் அந்நாட்டுத் தொழிலாளர்களின் விடுதலை சீக்கிரம் கிடைக்கவில்லையென இத்திட்டத்தின்மூலம் வரையறுக்கப்பட்டது. ரஷியப்புரட்சி வெற்றியடைந்ததற்கு முன்கூறிய திட்டங்களே பயனளித்த தென்பது இதனால் அறியக் கிடக்கின்றது

லெனினது இப்புது திட்டம் வியாபித்துவரும் சமயத்தில் ஸ்டாலின் ஸைபீரியாவிலிருந்து தப்பியோடிவந்து டைபிளீஸி லிருந்தனர். அதேசமயம் அவர் காக்கேஸஸ் யூனியன் கமிட் டிக்கு (Caucasus Union Committee) ஒரு அங்கத்தினராக தெரிவு செய்யப்பட்டார். அவரது அபிப்பிராயம் திடமான தாக இருந்தது. இவரது திடசித்தம்தான் இவருக்கு கண் மதியை அளித்தது. இச்சமயத்தில்தான் இவர் "தொழிலாளி யின் போராட்டம்" என்ற ஒரு புத்தகத்தை பிரசுரித்தார். அப்போதுதான் தென் ரஷியாவில் இப்புது திட்டத்தி லமைந்த கட்சியை இவர் தலைமை பூண்டு நடத்தி வந்தார். இவரை "முதல் தொழிலாளத்தலைவர்" என்றுகூட சொல்ல லாம். இந்த சமயத்தில்தான் லெனின், ஸினோவியவ் (Zinoviev) லூனா சார்க்ஸி (Leuna Charsky) போன்ற கிளர்ச்சிக்காரர்களை ஸ்டாலின் சந்திக்க நேர்ந்தது. லெனின் இங்கிலாந்திற்கும் மாக்ஸிம் கார்க்கி (Maxim Gorky) இத்தா லிக்கும் நாடுகடத்தப்பட்டிருந்த சமயம்தான் ஸ்டாலின் இவர் களைக்காண நேர்ந்தது.

லெயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் 1905-ம் வருடம் ஏற்பட்ட கிளர்ச்சியில் இவர் அந்தரங்கமாக பல வேலைகள் செய்து வந்தார். இரத்தம் சிந்த வேண்டிய இயல்புகளேற்படுமென படித்த கூட்டத்தினர் கண்டவுடன் தொழிலாளர் கட்சியி லிருந்து அவர்கள் விலகினர். ஆகவே கசகஸியின் பூரண அதி காரமும் உழைப்பாளிகள் கையில் வீழ்ந்தது. இப்புது போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கு பணம் தேவை யாயிருந்தது. ஆகவே லெனின் ஜர்மெனியில் கூடா ஒழுக்கத் திலீடுபட்டிருந்த பெண்களிடத்தில் பணம் வாங்கி தனது பிர சுரங்களை வெளியிட்டார். ஸ்டாலின் இச்சமயத்தில் அதிக வேலை செய்தார். இவர் கள்ளபாங்கு நோட்டுகளை வெளி யிட்டார். நிதி சேகரிக்க பணம் திருடினார். லெனினால் அனுப்பப்பட்ட "பாம்"களின் உதவியினால் ஸ்டாலின் ஒரு தொழிலாளக் கூட்டத்தை நடத்திச்சென்று டைபிளிஸ் ஸ்டேட் பாங்கில் கொள்ளையுமிட்டார். இதில் 50 நபர்களின் உயிர் சேதமாகியது

1908-ம் ஆண்டில் ஸ்டாலின் மீண்டும் கைதியாக்கப் பட்டு நாடு கடத்தப்பட்டார். ஒரு வருடத்திற்குள்ளாக இவர் எப்படியோ தப்பி கோபா (Koba) என்ற நாமதேயத் துடன் வெளிவந்தார். ஆனால் கோபா என்ற பெயர்கூட ரஷியப் போலீஸ் வர்க்கத்தினரை அதிக நாள் ஏமாற்ற முடி யவில்லை. இவர் ரஷிய நாட்டின் கடுங்குளிர் பிடித்த இடத் திற்கு மறுமடியும் நாடு கடத்தப்பட்டார். ஆனால் இந்த நிர்ப்பந்தம் அவரை மீண்டும் தப்பியோடி வரத்தான் இடங் கொடுத்தது. மாரிக்காலத்தில் ஒரு நாள் ஸ்டாலின் குளிர் பிர தேசங்கள் வழியாக நெடுந்தூரம் கடந்து தனது ஆரம்ப இடத்திற்கு வந்து விட்டார். இச்சமயத்தில் அவர் அதிக பயங்கரமானவராக அரசியலாராலும், இதரர்களாலும் கரு தப்பட்டார். 1913-ம் ஆண்டுவரை இவர் போலீஸ் அதிகாரி களோடு "கண்ணாமூச்சி" விளையாடி வந்தார். பல தடவை இவர் கைதியாக்கப்பட்டார். ஆனால் அத்தனை தடவைகளிலும் எப்படியோ தப்பிச் சென்று விடுவார். இந்த நிர்ப்பந்தமான நாட்களில் இவர் தனது கொள்கை விளக்க கத்தை பிரசுர மூலியமாக நடத்தி வந்தார். "பாட்டாளியும், சிப்பாயும்", "பாட்டாளியின் வழி" "உழைப்பாளி" முதலிய புத்தகங்களை இவர் வெளியிட்டார். லெனின் அதிக தூர மான இடத்திலிருந்து தனது வேலையைச் செய்து வந்தார். ஸ்டாலின் லெயின்ட்பீட்டர்ஸ் பர்க்கிலுள்ள பிரசுராலயத்தை

தனது உபயோகத்திற்கு பயன்படுத்திக் கொண்டார். ஸ்டாலினைப்போன்று இதர போல்ஷ்விக் தலைவர்கள் அதிக கஷ்டப்படவில்லை. இவருக்கு ஏற்பட்ட தொல்லை, கொடூரம், காடு கடத்தல் முதலியவைகள் மிகக் கோரமானவை! ஏகாதிபத்திய வெறிகொண்டோர்களின் மத்தியில் தைரிய மனப்பான்மையுடன் சலியாதுழைத்தவர்களில் ஸ்டாலின் தான் மிகச்சிறந்தவர். "மக்கள் சுதந்தரமாக வாழவேண்டும்" என்ற ஆப்தவாக்கியம் இவரது காவில் சதா தொனித்தது. தனது முழு அறிவையும் தொழிலாளர் நன்மைக்கே பயன் படுத்தினார் ஸ்டாலின். 1913-ம் வருடத்தில் இவர் மீண்டும் ஒரு அதிகார வர்க்கத்தினரால் கைதியாக்கப்பட்டார். உழைப்பாளிகள் மத்தியில் வீரர் ஸ்டாலின் சூரியனாக விளங்கினார். அவரது போராட்டச் சுடர் ஒளியுடன் விகசித்தது. பலம் பொருந்திய ஸார் கூட இவரை இன்று வரை கொல்லவோ அடக்கவோ முடியவில்லை.

இச்சமயத்தில் நாடுகடத்தப்பட்ட இவர் நான்கு வருடம் சென்ற பிறகு - அதாவது 1917-ல் பீட்ரோ கிரட்டிற்கு வந்தார். இச்சமயத்தில் கெரன்ஸ்க்கி (Kerensky) என்பரால் அரசியல் கைதிகளுக்கெல்லாம் மன்னிப்பு கொடுக்கப்பட்டது. இதன் நிமித்தம் ஸ்டாலினும் விடுவிக்கப்பட்டார். ஸ்டாலின் விடுதலையானவுடன், உழைப்பாளிகள், சிப்பாய்கள், விவசாயிகள் முதலியோர்களிடையே சிறு சிறு கூட்டங்களை ஏற்படுத்தி தனது பிரசாரத்தை தீவிரமாக நடத்தி வந்தார். ஜர்மெனியர்களால் லெனின் ரஷியாவிற்குள் மீண்டும் புகுத்தப்பட்டவுடன் ஸ்டாலினானவர், தனது திட்டத்திற்கு தயாரான ஒரு கோஷ்டியின் தலைமையில் இருப்பதை அவர் கண்டார். இதர போல்ஷ்விக் தலைவர்கள் நெருப்புப்பொறி பறக்கும் பிரசங்கங்களிலீடுபட்டிருந்தபோது ஸ்டாலின் சோவியத் கவர்ன்மெண்டின் சட்ட நிருவாக கமிட்டிக்கு ஸ்தாபன காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். ஸ்டாலின் நடைமுறையில் தனது ஸ்தாபன வேலையில் தீவிரமாக ஈடுபட்டு தொழிலாளர் சமூகத்தின் கௌரவத்தையும் உயர்வையும் கருதி வேலை செய்து வந்தார். இச்சமயத்தில் ஆசியா கண்டத்தின் ரஷியப்பகுதி சோவியத் நிட்டத்திற்கு கட்டுப்படவேண்டி பல வேலைகளை ஸ்டாலின் செய்து வந்தார். இவர் பல ஜாதியார்களிடையே அவர்கள் பாஷையையும், இயல்பையும் எதிர்க்காது மிக சாதுர்யமாக வேலை செய்து வந்தார். லெனின் ஐரோப்பிய ரஷியாவில் பிறந்தவராகும்.

ஆனால் ஸ்டாலின் ஆசியா ரஷியாவில் பிறந்தவர். எனவே தனது மக்கள் தங்கள் சொந்த வழியில் தத்தம் அபிப்பிராயங்களை கூற அனுமதிக்க வேண்டுமென ஸ்டாலின் கூறினார். அப்போது தான் அவர்களிடையே ஆதரவு கிடைக்குமென ஸ்டாலின் நன்குணர்ந்தார். ஸ்டாலினுடைய புத்தி அதி தீக்ஷண்யமானது. அவர் சாகசமும், சாதுர்யமும் தான் இன்று ரஷிய நாட்டை உயர்ந்த நிலையில் வைத்திருக்கிறது.

1920-ம் ஆண்டிலிருந்து 1623-ம் ஆண்டுவரை தெற்குப் பிரதேசங்களில் ராங்கல் (Wrangel) என்பாரும், மேற்குப் பிரதேசங்களில் டென்க்கின் (Denkin) என்பாரும் எதிர்த்தனர். இச்சமயத்தில் ஸ்டாலின் அவர்களது எதிர்ப்பை சமாளிக்கும் பொறுப்பில் தீவிரமாக ஈடுபட்டார். அதே சமயத்தில் லெனினும் அதிக களைப்புற்று மரணமெய்தும் நிலைக்கு வந்துவிட்டார். எனவே ஸ்டாலினுக்கும், டிராட்ஸ்க்கிக்குமிடையே தலைவர் பதவிக்கு போராட்டமேற்பட்டது. இவர்களிருவர்களுக்குமிடையே இரு கட்சிகளிருந்தன. ஸ்டாலின் "மக்களை ஒன்றுபடுத்தி நடைமுறையிலே வெற்றியைக் காண்பிக்கவேண்டு" மெனக் கூறினர். டிராட்ஸ்க்கி என்றவர் தீவிர போக்கு கொண்டவராகும். இவர் தலை தெறிக்கும் வேகத்தில் கொள்கையை நடத்திச் செல்லவேண்டுமென்றார். லெனின் இறந்தவுடன் "சிகப்புப் படைக்கு" தனாக தான் வரவேண்டுமென போராடினர் டிராட்ஸ்க்கி. ஸ்டாலினானவர் பயிற்சியளிக்கப்பட்ட தொழிலாளர் மீது நம்பிக்கை வைத்திருந்தார். ஆகவே இறுதியாக ஸ்டாலின் தான் வென்றார். டிராட்ஸ்க்கி நாட்டை விட்டு ஓடி விட்டார். ஸ்டாலின் எதிரியில்லாத தலைவராக 10 லக்ஷம் வாக்குரிமையாளர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

"சித்தாந்தம் உயர்ந்ததல்ல, உபயோகிக்கப்படவேண்டிய விதத்தில் இருக்கிறது அதன் மாண்பு", "அதை கருவியாக உபயோகித்தே பல காரியங்களை சாதித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது", என லெனின் கூறிய கூற்றுக்கு ஸ்டாலின் உடன்பாடாயிருந்தார். கால நிலைக்கு ஏற்றவாறு ஸ்டாலின் போல்ஷ்விக் சித்தாந்தங்களை அமைத்து வருகிறார். இம்மாதிரி செய்தால் தான் ரஷியா இதர நாடுகளோடு சமாதானமாக இருக்குமென நம்பி வருகிறார் ஸ்டாலின். ஸ்டாலின் ஆழ்ந்த சிந்தனையோடு, நடு நிலைமையுடனும் தனது நாட்டில் சர்வாதிகாரியாக விளங்குகிறார்.

"தனிமை கண்டதுண்டு அதிலே

சாரமிருக்கு தம்மா" என்ற

வாக்கின்படி ஸ்டாலின் தனிமையில் யோசித்து தனது காட்டின் உயர்வை வலியுறுத்த முனைகின்றார். போல்ஷ்விக் திட்டங்களை கால நிலைக்கு ஒப்ப அமைத்து காட்டின் சுபீட்சத்தை பாதுகாக்கிறார் ஸ்டாலின். ஷீச்செரின் (Tchicherin) லிட்வினாப் முதலிய நபர்களை வெளி நாட்டுக்கும, முக்கியமாக ஐரோப்பிய தேசத்திற்கும் ஸ்டாலின் அனுப்பினாலும் தனது ரஷிய அரசியல் முறையை புறக்கணித்து விடவில்லை. இராஜ தந்திரமாக எல்லா விஷயமும் நடக்கிறது! வெளி உலக தொடர்பு கொண்டால்தான் எக்காரியத்தையும் சாதிக்க வசதியாக இருக்கும் என்ற எண்ணம் ஸ்டாலினுக்கு உண்டு.

தொழிலாளர்கள் இன்று ஸ்டாலினை போற்றுகிறார்கள். சகல புள்ளி விபரங்களும் ஸ்டாலின் பாட்டாளிதான் என்பதை உளர்ஜிதப்படுத்துகின்றன. நிர்வாக அதிகாரமும், நிர்வாக அமைப்பும் இவரை கெடுதியான செயல்களுக்குத் தூண்டவில்லை. ஸ்டாலின் தொழிலாளியாகவே பிறந்தார்; தொழிலாளியாகவே சர்வாதிகார பீடத்தில் உட்கார்ந்திருக்கிறார்; தொழிலாளியாகவே காட்டு நடப்புகளில் காட்சியளிக்கிறார்; தொழிலாளியாகவே வாழ்கிறார். நாடு கடத்தப்பட்ட கொடுமைகளும் எகாதிபத்தியத்தின் விஷ மனப்பான்மையும், அதன் தந்திரங்களும் ஸ்டாலினுக்கு மனப்பூர்வமாகத் தெரியும். அதனால்தான் ஸ்டாலின் தொழிலாளர் உயர்வில் காட்டமாயிருக்கின்றார். சிலர் இன்று ஸ்டாலின் சர்வாதிகார பீடத்திலமர்ந்திருப்பதால் அவர் எகாதிபத்திய செறுக்கிற்கு காரணஸ்தராகத்தான் இருக்கின்றார் எனக் கூறுகின்றனர். ஆனால் இக் கூற்று எவ்வளவு தூரம் உண்மை யென்பதை வாசகர்களே முடிவு கட்டிக் கொள்ளட்டும். எனினும் இதன் முடிவு ஆழ்ந்த ஆராய்ச்சியின் பேரிலேயே சொல்லப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே ஸ்டாலின் விஷயத்தில் எதையும் நிதானித்துச் சொல்வதுதான் உசிதம். அவரைப் பற்றிய விஷயத்தை ஒவ்வொருவரும் தனித்தனியே நிர்ணயித்துக் கொள்ளட்டும். அந்நிர்ணயம் நடு நிலைமையுடன்தான் செய்யப்படவேண்டியிருக்கிறது.

இன்று ஸ்டாலினது நிர்வாகத்தின் கீழ் ரஷிய நாடு மாபெரிய மாற்றங்களை அடைந்திருக்கிறது. நாட்டின் சகல அம்சங்களிலும், மேலைத் தேசங்களின் ஆதிக்கங்களும்,

ஒழுக்கங்களும் தான் ரஷியா நாட்டின் விடுதலைக்கு அணிகலன்கள் என பழைய ஜார் ஆகிய பீட்டர் என்பார் நம்பியிருந்தார். ஆனால் இன்று ரஷிய நாடு ஒரு ஆசியாக்காரரால் நிர்வாகம் செலுத்தப்பட்டு வருகின்றது. ரஷியநாட்டின் மேற்பகுதியாகிய போலந்து கத்தோலிக்க மதத்தின் கைப்பிடிக்குள் சென்று விட்டது. ஆனால் ரஷிய நாட்டின் கொள்கை, இராஜரீகம் முதலியன ஆசிய நாட்டிற்கு உடன்தையானதாகத்தானிருக்கிறது. கைத்தொழில்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு சமமாகவும், சண்டைகளிலும் அவைகளை சமாளிப்பதற்கான முஸ்தீப்புகளுடனும் ரஷியா நாடு முற்படுகிறது. இந்தப் பழக்கங்கள்தான் மேல் நாட்டின் பழக்கங்களாகும். இதுவும் தற்காப்பு நிமித்தமாகவே செய்யப்படுவதாக அறியக்கிடக்கின்றது. ஜப்பான், "ஆசியாக்காரர்களும் போருக்கு இளைத்தவர்களல்ல" என்ற நியதியை நிலைநாட்டிவிட்டது. இதேசமயத்தில் ஸ்டாலின் தனது கூட்டுறவை ஆசியா கண்டத்தின் சகல பிரதேசங்களிலும் வியாபகப்படுத்த விழைகிறார். துருக்கி, பெர்ஷியா முதலிய நாடுகளோடு ஸ்டாலின் ஐக்கிய மனோபாவத்தை நிலைநிறுத்த வழிகோலியிருக்கின்றனர். போர்வெறிகொண்டு துவ்வினிக்கொண்டிருக்கும் ஜப்பானோடு மோதிக்கொள்வதினின்றும் விலகியிருக்க ஸ்டாலின் அதிக அபேட்சையாக இருக்கின்றார். கூடியவரை அதனோடு பகை மூட்டிக்கொள்வதினின்று தனது தேசத்தை கண்காணித்து வருகின்றார். இன்றைக்கு ரஷிய நாட்டில் பல சிரச்சேதங்களும், தண்டனைகளும் நடப்பதைக்கண்டு உலக எதிரிகள் ரஷியாவை எள்ளி நகையாடுகின்றனர். ஆனால் இன்று ரஷிய நாட்டின் நிலைமையானது அப்படி செய்யவேண்டிய நியதிக்கு உட்பட்டிருக்கிறது. துவேஷ மனப்பான்மை கொண்ட நபர்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் வேலையைத்தான் ஸ்டாலின் மேற்கொள்கிறார். இப்படிச் செய்யாவிடில் ரஷிய நாட்டின் நிலை மிக மோசமானதாக ஆகிவிடும். இப்படிச் செய்வதிலும் ஒரு நவீன இராஜ தந்திரம் இருக்கிறதென்பதை மட்டும் இன்றைய அறிஞர் குழாம் அனைத்தையும் ஒப்புக்கொள்கிறது.

ஸ்டாலின் ஆரம்பத்திலிருந்து தலை தெறிக்கும் வேகத்தில் மிக நுண்ணிய முறைகளைக்கொண்டு வேலை செய்துவந்தவராகும். எப்போதும் அவர் சாதாரண மனிதனாகவே வாழ்ந்து வருகின்றார். ஸ்டாலினது தனிமை எதைக் குறித்துக் கனவு காண்கிறதென்பதை நாம் திட்டமாகக் கூறி

நான்கு வேதங்களின் வரலாறு.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" (குறள்)

ஹிதோபதேச சுலோகத்தின் பொருள்:—

"அநேக சந்தேகங்களை அறுக்கிறதும் காணப்படாத வஸ்துவை (கடவுளை)க் காண்பிக்கிறதும், எல்லாருக்கும் கண்ணாயிருக்கிறதுமான சாஸ்திரம் (வேதம்) எவனுக்கு இல்லையோ அவனே குருடனையிருக்கிறான்" என்று பொதுவாய் வெளியிடுகிறது. இந்தச் சுலோகத்தை எதேச்சதிகாரும் ஒப்புவார்கள்.

1. சதுர்வேதம் அனாதி என்று—வேதாந்த சித்தாந்த சமவாதம். வஸ்து நிச்சயம். 65ம் பாட்டில்:—"அந்த நான்கு வேத

விட முடியாது. ஆனால் ஸ்டாலின் இன்னுள்ள சர்வாதிகாரிகள் சகலரிலும் மேம்பட்ட கொள்கையுடையவரும், சுபீட்சமான பாதையை காட்டுவாருமாகும்.

இவ் இருபதாம் நூற்றாண்டில் தொழிலாளர் சமூகத்திற்காக அதிக நன்மைகளை ஸ்டாலின் செய்துள்ளார். இவர் செய்த நன்மைகள் தொழிலாளர் சமூகம் உள்ளளவும் மறைந்து போகாது. ஸ்டாலின் இன்றைய உலகின் சர்வாதிகாரிகளில் சிறந்தவர்; இராஜ தந்திரத்தில் இதரர்களுக்கு அவர் சளைத்தவரல்ல. அவரது புகழ் உலகில் நீடித்திருப்பதற்கு அவர் செய்த வேலைகளே பிரத்தியக்ஷப் பிரமாணமாக இருக்கின்றன. ஸ்டாலினுடைய நாமதேயத்தை உச்சரித்தாலும் தொழிலாளர்களுக்கு ஒரு நவீன உற்சாகம் ஏற்படுகிறது. எனவே இவர் நீடித்தகாள் உலகிலிருந்து மக்கள் மனதில் இயங்கிக்கொண்டும், விடுதலைக் கோஷத்தைக் கிளப்பிக்கொண்டும் இருக்கவேண்டுமென தொழிலாளர் சமூகம் பிரியப்படுகின்றது. தொழிலாளர்கள் இவரை தங்கள் விடுதலையை மோசடியான ஒரு யுகத்தில் காப்பாற்றி வருவதைக்கண்டு மனமகிழ்ச்சியடைகின்றனர். அறிஞர் ஸ்டாலின் நீடுழி வாழ்க!

மும் அநாதியாயிருக்கிறது. அந்த வேதங்களும் சொன்ன நல்ல பொருள் உண்மைப் பொருளாய் இருந்தது. அந்தப்பொருளை உறுதியாகக் கொண்டவர்கள் துன்பம் இல்லாமல் எப்போதும் ஒரே தன்மை உள்ளவர்களாய் நிலைத்து போனந்தத்திலே வாழுவார்கள்" என்றிருக்கிறது.

2. பாகவதம்:...3வது ஸ்கந்தம். 12ம் அத்தியாயம் 34, 37வ் வெளியாகிறதாவது:- "அந்தப் பிரமாவானவன் தன்னுடைய நாலு முகங்களிலும் இருந்து கிரமமாய் இருக்கு, யசுர். சாம, அதர்வண வேதங்களையும் உண்டாகச் செய்தான். மேலும் மந்திர ஸ்தோத்திரத்தையும், யாகத்தையும், தீக்ஷையும், பிராயச்சித்தத்தையும் பலி உண்டாக்கினான்" என்பதாகும்.

3. பாகவதம்:—9ம் ஸ்கந்தம்: 14ம் அத்தியாயம், 51, 52வ்:.... 'ஓ அரசனே! ஆதியிலே ஒரே வேதம் இருந்தது. எல்லாம் வாக்கு மயமான பிரணவ மந்திரமே அந்த வேதம். திரேதா யுகத்தின் முதலிலே புரூரவன் என்ற இராஜாவினாலே தான் மூன்று வேதமும் உண்டானது' என்று கூறுகின்றது.

4 விஷ்ணு புராணம்:... அப்படியல்ல; "விஷ்ணு வேதவியாசனாக ரூபம் எடுத்து ஒன்றாய் இருந்த வேதத்தை நான்கு வேதமாகப் பிரித்து அநேக உட்பிரிவுகளினாலே விஸ்தாரம் ஆக்கினான்" என்கிறது.

5. பிரமோத்தர காண்டம்:...சிருஷ்டி பகிமையுரைத்தது. 10ம்பாட்டில்:"சிவன் தன்னுடைய இச்சையினாலே எடுத்துக் கொண்ட மூன்று குணங்களுக்குள்ளே ஒன்றாய் இருக்கிற இராசத குணத்தினாலே பிரமதேவனைச் சிருஷ்டித்து வேத சாஸ்திரங்களை எல்லாம் அந்தப் பிர்மாவுக்கு அப்போதே போதித்தான்" என்று வெளியிட்டிருக்கின்றது.

6. ஹரிவம்சம் 11,056ல்:— "வேதங்களுக்குத் தாயாகவும், மூன்று அடிகளை உடையதாகவும் இருக்கிற காயத்திரி மந்திரத்தை பிர்மா உண்டாக்கினான். அந்தக் காயத்திரியினிருந்து நாலு வேதங்களையும் உண்டாகச் செய்தான்" என்றுகூறுகிறது.

7. மானவதரும் சாஸ்திரம் 2ம்:- அத்; 77ம் சுலோகம் கூறுவதாவது "தத் என்கின்ற சொல்லை முதலில் உடைய காயத்திரி மந்திரத்தினுடைய மூன்று அடிகளைப் பிரம்மா மூன்று வேதங்களில் இருந்தே ஒழுங்காகக் கறந்தான்" என்பதே.

8. மானவ தரும சாஸ்திரம்:- 1 அத்: 23ம் சுலோகம்:- "யாகங்களை நிறைவேற்றும்படியாக பிரம்மா நெருப்பிலேயிருந்து இருக்கு வேதத்தையும் காற்றிலேயிருந்து யசுர் வேதத்தையும் சூரியனிலேயிருந்து சாம வேதத்தையும் கறந்தான்" என்று வெளியிடுகிறது. இது முந்தியதை மறுக்கிறது.

9. வேதாந்த பிரகரசம் என்னும் நூலிலே சொல்லப்பட்டதாவது:-"வேதமானது பூணூலைத் தரித்த பிராமணர், சத்திரியர், வைசியர் என்னப்பட்ட 3 ஜாதிக்கே யல்லாமல் வேறு யாருக்கும் உரியதல்ல" என்கிறது.

10. ஸ்திரீகளும் சூத்திரர்களும் வேதங்களைக் கேட்கவும் கூடாது என்று சொல்லுகிற சுலோகத்தின் பொருள் என்னவெனில் "இருக்கு யசுர், சாமம் என்கிற மூன்று வேதங்களையும் ஸ்திரீகளும் சூத்திரர்களும் ஜாதி கெட்ட துவிசர்களும் காதினால் கேட்கவும் கூடாது" என்று கண்டிக்கிறது.

11. பாகவதம் 3-ம் ஸ்கந்தம் 12-ம் அத்தியாயம் 39-ம் சுலோகத்தில்:- "சகலத்தையும் பார்க்கிற ஈஸ்வரன் தன்னுடைய எல்லா முகங்களிலும் இருந்து இதிகாச புராணங்களை ஐந்தாம் வேதமாகப் பிறப்பித்தான்" என்று வெளியிட்டிருக்கிறது.

மேற் சொல்லிய நூல்களின் பொருள்களை ஆராய்ந்து சிந்திப்போருக்கு ஆரியவேத சாஸ்திர புராணாதிகாச முதலியவைகள் உள்ளபடியே சிருஷ்டிகரும் சர்வலோகாதிபதியும் சர்வஜீவதயாபரருமான ஒரே மெய்யான கடவுளால் மக்கள் அனைவருக்கும் பொதுவாகவும் தம்மை அறிந்து உய்ய எவருக்கும் அவசியந் தேவையானதுமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அருள் வேதமா? என்பதும் அல்லது பூலோகத்திலுள்ள ஐந்து கண்டங்களில் ஒன்றாகிய ஆசியாவின் ஒரு சிறு பாகத்திலுள்ள நாதபாத கண்ட வாசிகளில் ஒரு சிறு வகுப்பாரான ஆரியவர்த்த வாசிகள் தங்களுக்குமாத்திரம் உரியதன்று காங்களே எற்படுத்திக் கொண்ட கட்டுரையான இயல் வேதமா என்பதும் விளங்கக் கூடும்.

எப்படியெனில் தற்காலத்தில் பற்பல பாஷாக்கியானம் உள்ள கற்றோரானாலும் சரி, கல்லாதோரானாலும் சரி, எத்தரத்தாரும் பற்பல தேசங்களுக்குப்போய் வந்தினாலும், பல தேசத்தார்களுடன் கூடிவசித்து பலவகையிலும் பழகிவருகிறதினாலும் அருள் வேத இயல்வேதக்காரர்களுடைய வைதீக இலௌகீகசுகர்மானுஷ்

டானங்களைக் கண்ணாரக்கண்டும் காதாரக்கேட்டும் வருகிறதனா லும் மாத்திரமல்ல, உலகமெங்குமுள்ள மதாஜுசாரிகளின் அபிவி ருத்திகளையும் இந்து சமயத்தார்களிலேயேனத்தனையோ நவீன மதங்கள் ஏற்பட்டு பார்ப்பனீயங்களை ஒழித்த விடுகிறதினாலும் இயல்வேத சமயங்களின் சீர்கேடும் அருள் வேத சமயங்களின் சன்மார்க்க நீதிநெறி, இல்லற தருமம், எகதேவ வழிபாடு, எகபத் தினி விரதமும் எத்தேச வாசிகளிடத்திலும அன்பும் சகோதரத் துவமும் நடைபெற்றுவருகின்றதை சர்வாநுபவமாய் அனுப விக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெரிந்திருக்கிறோம். இவ் விஷயத்தை எவரும் மறுக்கார்கள்.

மேலும் மேற்குறிப்பிட்டிருக்கிற ஸ்ரீய சமய இயல்வேதங் களின் ஆபாசங்களை நமது முன்னோர்களில் எவரேவர்கள் கவ னித்தார்களோ, அவர்களும் தங்கள் பின்னடியார்களின் மூன் னேற்றத்துக்கும், தேசத்தின் அபிவிருத்திக்கும் எல்லாரும் ஒரே இனமான மனிதர்களாகையால் சகோதரத்தன்மையையும், ஒருவ ருக்கொருவர் அன்பும் ஐக்கியமும் பொருந்தி மேம்பாடடையும் படிக்குச் சில பாடல்கள் எற்படுத்தியிருக்கிறதையும் இதில் குறிப் பிடுவது பலருக்கும் நன்கு விளங்குமென்று நம்பிதனடியில் எழு தலானேன்.

தாயுமான சுவாமிகள்:- "எதுந்தெரியாதினை மறைத்த வல்லிருளை, நாதா நீ நீக்க வொருருவானை வினக்கில்லையோ" என் றார்.

பொய்யாப் புலவர் திருக்குறள்:— "என்னா விளக்கும் விளக் கல்ல சான்றோர்க்குப்பொய்யா விளக்கே விளக்கு" என்கிறார்.

பத்திரகிரியார்:—"சாத்திரத்தைச் சுட்டி சதுர் மறையைப் பொய்யாக்கிச் சூத்திரத்தைக்கண்டு சுகம்பெறுவ தெக்காலம்"— என்கிறார்.

பரய்ச்சலூர்ப் பதிகம்:—"ஓதிய நூலும் பொய்யே யுடலுயிர் தானும் பொய்யே, சாதியு மொன்றே யாகுஞ் சகலமும் வேற தாமோ" என்கிறது.

கடுவெளிச்சித்தர்:—"பொய் வேதந்தனைப்பாராதே அந்தப் போதகர் சொற்புத்தி போதவோராதே" என்கிறார்.

ஓழிவிலொடுக்கம்:—"பெண்ணா ணலியாய்ப் பி ற ந் து வளர்ந்தே யொழியு, மெண்ணாத பேதமியல் பின்றிப்-டண்ணுங் காற், காணக்கர்த்தா வொருவனுண்டவனைக்காட்டு நூல், ஊணு முமாகமமுமோம்" என்று வெளியிடுகிறது.

கொங்கணர் பாடல்:- "கடவுளொ னொருவனுன்றே வேத மொன்றே காரண சற்குரு தீட்சைதானுமொன்றே, அடைவு டனே அவாருளும் பதவியொன்றே அம்புவியில் பணிப்பிறவி யானதொன்றே, நடைவழியும் பலபணிமோர்க்கொன்றே யல்லா மல் நால் வேத மறுசமய நடக்கை வேறாய்த் திடமுடைய தேவர் பலருண்டென்போர்கள் தீநாகுக் காளாவர் திண்ணந் தானே" என்று எச்சரிக்கின்றது.

பட்டணத்து சுவாமிகள்:—"நீற்றைப் புனைந் தென்ன நீராடப் போயென்ன நீ பன்றோ, பாற்றப் பிறக்கவை யறிந்தா யில்லை பறைமுடியில், எற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் எதுக் கடா, வூற்றிற் கிடந்து துறை தெரியாமல் அலைகின்றதே" என் கிறார்.

சிவவாக்கியம்:— "இருக்கு நாலு வேதமும் எழுத்தறவே யோதினும் பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரானியான் உருக்கிநெஞ்சை உட்கலந்து உணமைகூற வல்லிரேல், சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமே" என்கிறது.

சங்காராச்சாரியார் நாதாந்த சாரப்பாடல்:— "உ லகி லே பிறந்து முன்னோரோதிய கலைகளெல்லாம், நிலையதாஞ் சோதி தன்னை நிசமதாய்ச் சொன்னதில்லை, பலபல வேதமாகப் பங்க மாய்க் கூறு செய்தே, அலைகடோற் பொய்யைப் பேசியருளாக முந்திப் போனார்" என்கிறது.

அருள் வேதம் ஒன்றே எல்லாருக்கும் அவசியம்-என்று பாடிய பாடலாவது:- "அத்தனருள் வேதம் போல வுலகினியிற் பிறிதென்றில்லை, புத்தியாற் புகுந்தோர் காண்பார் புகாதோர் புலுகிதென்பார், சதுதியங் குருமேலிந்த சுத்தத்தை விட்டுநீயும் ஒத்திடே போவாய் நிற்றினுயிர் தனையிழப்பாயுண்மை."

அருள் வேதம்.—"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து பொல்லாங்கு கானவைகளை விட்டு விலகி நலமானவைகளைப் பற்றிக் கொள்ளுங்கள்" என்று போதிக்கிறது. ஆராய்ச்சி

ROJA MUTHIAH
47, HOSPITAL ROAD
KOTTAIYUR-623 106
P.M.DIST-INDIA

ஆண்டாள், சீதை தெய்வங்களா?

(சோழர் அ. பொன்னம்பலனார்.)

ஆண்டாள், சீதை இருவரும் விதவை வயிற்றுப் பிள்ளைகளா? அல்லது இவர்கள் தாயார் தகப்பனார் யார்? இவர்கள் தெய்வமாகக்கருதி வணங்கப்படுவானேன்? இது எனக்கு நீண்ட நாள் சந்தேகம். இதைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

ஆண்டாள் வரலாறு.

ஆண்டாள் ஒரு நந்தவனத்தில் துளசிச்செடியினடியில் கிடந்ததாகவும் அதை ஒரு வைணவ பக்தர் எடுத்து வளர்த்ததாகவும் ஆண்டாள் புராணமூலமாகத் தெரிய வருகிறது.

ஆண்டாள் அன்று பிறந்த மேனியாகத் துளசிச்செடியினடியில் கிடப்பானேன்? ஊரார் பழிப்புக்களுஞ்சி ஒரு விதவை கள்ளத்தனமாப்பெற்ற பிள்ளையை எவருமறியாமல் ரகசியமாகக் கொண்டு வந்து நந்தவனத்தில் துளசிச்செடியடியில் போட்டிருக்க வேண்டும்; அல்லது தனக்குப்பிறந்தபெண் குழந்தையை காப்பாற்ற சக்தியின்றி எவராகிலும் வளர்க்கட்டும், அல்லது எப்படியோ போகட்டும் என்று ஒரு அநாதைத் தாயால் ஆண்டாள் அலட்சியமாகத் துளசிச்செடியினடியில் போடப்பட்டிருக்க வேண்டும். இதற்கு மாறாக இயற்கையாகவே நந்தவனத்திலே துளசிச்செடியடியிலே பிறந்த மேனியாக ஒரு பெண் குழந்தை அநாதையாகக் கிடப்பதற்கு எவ்வித ஞாயமுமில்லையல்லவா? சிலர் ஆண்டாள் அவதாரம் என்பார்கள். அது முற்றிலும் பொய்யாகும். ஆண் பெண் கூட்டுறவின்றி எந்த அவதாரமும் தோன்ற ஞாயமில்லை. இது விஞ்ஞானிகள், ஆராய்ச்சிக்காரர் கண்ட அநுபவ உண்மையாகும். எனவே ஆண்டாள் ஒரு விதவையின் குழந்தையாக இருக்கவேண்டும், அல்லது ஒருவிபசார தாசியின் பெண்குழந்தையாகப் பிறந்து அவளால் காப்பாற்ற சக்தியற்று நந்தவனத்தில் போடப்பட்டிருக்கவேண்டும். ஆண்டாள் என்ற பெண்குழந்தையை பெரியாழ்வார் என்ற வைணவ பக்தர் எடுத்து வளர்த்ததாகவும் கூறப்படுகின்றது. இக்குழந்தை தனது நந்தவனத்தில் கிடந்ததைப்பற்றி பெரியாழ்வார் போலீஸா

ருக்குத்தெரிவிக்கவில்லை. அன்று போலீஸ் இருந்தாவிடில் அக் காலத்தில் நடைபெற்ற அசாதாரணத்தாருக்கோ, பொதுமக் களுக்கோ விளம்பரம் செய்வித்து தான் வளர்ப்பதற்கு அனுமதி பெற்றதாகவும் தெரியவில்லை. தனது நந்தவனத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்த மேனியாகக் கிடந்தது; கண்டார், கண்டதும் அன்பு கொண்டார்; எடுத்தார்; மார்புடன் அணைத்தார். மகிழ் வுடன் முத்தமிட்டார். நாராயணன் தனக்கு வழங்கிய பொக்கிஷம் என்று கருதி சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தார் என்று சரித்திரவாயிலாகத்தெரிகிறது.

பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்டபெண்ணாகிய ஆண்டாள்தக்க பருவமடைந்து நல்ல அழகும் குணங்களும் அமைந்து திருமணம் செய்து கொள்ளத்தக்க காதல் பருவத்தை பெற்றுவிட்டாள். பெரியாழ்வார் தனது நந்தவனத்தில் கிடைக்கும் மலர்களைக் கொண்டு நன்றாகக்கட்டி மாலையாக்கி தினசரி எம்பெருமானுக்குக் கொடுத்து வந்தாராம். ஒருநாள் வழக்கம்போல் கட்டி வைத்திருந்த மலர்மாலைகளை பெரியாழ்வார் இல்லாதசமயத்தில் ஆண்டாள் தனது தலையிலும் கழுத்திலும் சூட்டிப்பார்த்து மகிழ்ந்தாளாம்; பிறகு அம்மலர் மாலைகளை வழக்கம்போல் எம் பெருமானுக்கு அணிவிப்பதற்காகப் பெட்டியில் வைத்து விட்டாளாம். இது விபரம் பெரியாழ்வாருக்குத் தெரியாது. கோவிலுக்குச் சென்று மலர் மாலையை பெருமானுக்குச் சூட்டுவதற்காக எடுத்துக் கொடுத்தாராம். அதுசமயம் அம்மலர் மாலையில் ஒரு மயிர்க்கொத்து காணப்பட்டதாம். இதைக்கண்டு பெரியாழ்வார் மிகவும் வருந்தினாராம். இம்மலர் மாலையை யாரோ தீண்டிகெடுத்து விட்டார்கள் என்று கவலையடைந்து இனி உபயோகப்படுத்தக்கூடாது என்று கருதி தனது வீட்டிற்கு திரும்பக் கொண்டுவந்து விட்டாராம். வீட்டிற்கு வந்ததும் "யார் மலர் மாலையைக் கெடுத்தது" என்று கோபமாகக் கேட்டாராம். உடனே ஆண்டாள் பயந்துகொண்டு "நானே அம்மலர் மாலைகளைக் கெடுத்தேன்" என்று கூறினாளாம். பெரியாழ்வார் அதிகக் கோபத்துடன் "எம்பெருமானுக்கு இன்று மலர் மாலையில்லாது கெடுத்துவிட்டாயே, பக்தியில்லாதவளே, ஆசாரமில்லாதவளே"

என்றெல்லாம் எசி அடிக்கப்போனாராம். இது சமயம் எம்பெரு மாளே தோன்றி பெரியாழ்வாருக்கு புத்தி சொன்னாராம். "ஆண் டாள் என்மீது அளவற்ற அன்புடையவள்; பக்தி மேலீட்டினால் தான் எனக்கு உபயோகப்படவேண்டிய மலர் மாலைகளை தான் சூட்டிப்பார்த்து மிகவும் அழகாகயிருக்கின்றதா? என்ப தையறிந்து எனக்கு அனுப்பியிருக்கிறாள். நீ அவளை அநாவசிய மாகக் கோபிக்காதே. விரைவில் நான் தான் ஆண்டாளை மணமுடித்துக்கொள்ளப் போகிறேன். இனி ஆண்டாள் சூடிக் கொடுத்த மலர் மாலைகள் தான் எனக்கு வேண்டும்" என்று பக வான் கூறிவிட்டு கருடவாகனத்துடன் மறைந்து விட்டாராம். இந்த கற்பனை நம்பமுடியாத கற்பனையல்லவா?

ஆண்டாள் தினசரி தான் மலர் மாலைகளைக் கட்டி தான் சூடி பிறகு எம்பெருமானுக்கு சூட்டுவதற்குக் கொண்டு போய் கொடுத்து வந்தாளாம். இதனிடையில் இவர்களிருவருக் கும் காதலேற்பட்டு குறிப்பிட்ட தினத்தில் ஆண்டாளுக்கும் ஸ்ரீமந் நாராயணனுக்கும் திருமணம் நடைபெற்றதாம். திரும ணம் செய்துகொள்ளவந்த பகவான் கருடவாகனத்தை விட்டுக் கீழேயிறங்கும்பொழுது பதட்டமாகக் குதிக்க கால் நொண்டியா யிற்றாம். இக்காரணத்தால் அந்தப் பகவானை "நொண்டி மண் ணாளென்றும்" ஆண்டாளை "சூடிக்கொடுத்த நாச்சியா" என் றும் இன்றும் ஜனங்கள் அழைக்கின்றார்களாம்.

இப்புராணக்கதை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் சம்பந்த மில்லை ஒரு மூடநம்பிக்கையுள்ள கற்பனைக்கதையாகும். இது வைணவபக்தர்களின் பக்தி மேலீட்டால் எழுதப்பட்ட பொய் புராணமாகும். இப்புராணத்தில் கூறப்படும் ஆண்டாளுக்கு ஸ்ரீ வில்லிப்புத்தூரில் ஒரு பெரிய கோவிலிருக்கின்றது. பெரும் சொத்துக்கள், நகைகள், வேறு பல மான்யங்கள் நிறைய இருக் கின்றன. பக்தர்களால் வருட வருட மானக் காணிக்கைக்கும் கணக்கில்லை. யானை, ஒட்டை, குதிரை, வருட உற்சவம் தைலக்காப்பு உற்சவம் போன்ற வீண் ஆடம்பர செலவுகளுக் கும் கோவில் பட்டர், அய்யங்கார் கொள்ளைகளுக்கும் எல்லை யில்லை. ஆண்டாளுக்கு தினசரி பூஜைகள், ஆராதனைகள், அபி ஷேகங்கள், கொட்டு மேளங்கள் தாசி நாட்டியங்கட்கும் பஞ்ச

மில்லை. வயிற்றுப்பிழைப்பு அய்யங்கார்கள் வேதம் ஓதி கூலி பெற்று வயிறு வீங்க உண்டு களிக்கும் சோம்பேறி வாழ்க்கைக்கும் குறைவில்லை. ஆனால் உழைப்பாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் வேலையில்லாது கஷ்டப்படும் கோடிக்கணக்கான மக்களுக்கும் பூரீ வில்லிப்புத்தூர் ஆண்டாள் அம்மாள் கோவிலினால் என்ன பலன்? வீண் செலவும் கஷ்டங்களும் பொருள் நஷ்டங்களும் தவிர வேறென்ன? ஆண்டாள் புராணம் எழுதி வைத்த சோம்பேறிக்கூட்டம் ஆண்டாள் பெயரால் ஆடம்பரமாகவும் சுக போகமாகவும் எளிபவர்களை வஞ்சித்து எமாற்றி உயிர் வாழ்கின்றார்கள்.

சீதை வரலாறு.

இனி சீதையைப்பற்றி சிறிது ஆராய்வோம். ஆண்டாள் பிறப்புக்கும் சீதை பிறப்புக்கும் அதிக வித்தியாசமில்லை. சீதை ஜனக அரசனுக்கு நிலத்தில் நிலவுழுவார்கள் வேலை செய்யும்பொழுது கண்டு எடுத்துக் கொடுத்தார்களாம். இக்குழந்தை பூமியிலிருந்து-மண்ணுக்குள்ளிருந்து எடுக்கப்பட்டும் உயிரோடு இருந்ததாம். சீதாதேவிக்கு மூச்சையடக்கி பூமிக்குள்ளிருக்கும் யோகப்பயிற்சி தெரியும் என்று கூறுவதற்கில்லை. அந்த தேவி பூமியிலிருந்து எடுக்கப்பட்ட சமயம் பிறந்த மேனியாகவே காணப்பட்டாளாம். இதனை ஜனக அரசனுக்கு அறிவிக்கப்பட்டு அவரால் அவருடைய அரண்மனையில் "ராஜ குமாரத்தியாகவே" கருதி வளர்க்கப்பட்டு வந்தாளாம். ஜனக அரசனால் வளர்க்கப்பட்டமையால் சீதைக்கு ஜானகியென்ற பெயரும் வந்ததாம்.

சீதை நல்ல அழகும் சரீரக்கட்டும் பெற்று மணப்பருவமடைந்தாளாம். ஜனக அரசன் சீதைக்கு மணமுடிக்க எல்லா ராஜக்களுக்கும் "சுயம் வர" விளம்பரம் அனுப்பினாராம். அத்துடன் தனது அரண்மனையிலுள்ள ஒரு வில்லையெடுத்து வளைப்பவருக்கே சீதை மணம் முடிக்கப்படுவாளென்றும் குறிப்பிட்டிருந்தாராம்.

தசரத அரசரால் செய்யப்பட்ட அஸ்வமேத யாகத்தால் பிறந்த ராமர் தனது சகாக்களுடன் ஜனக அரசனின் அழைப்பைப்பெற்று வந்தாராம். வில்லையெடுத்து வளைத்தாராம். சீதையை மணமுடித்து மாலையிட்டுக் கொண்டு, அழைத்துப்போனாராம். பிறகு சீதையும் ராமரும்

காட்டில் வசித்தார்களாம். ராவணனுடைய சகோதரியை ராமனும் அவன் தம்பியும் அவமானப் படுத்தியதற்காக ராவணனால் சீதை லங்கைக்கு தூக்கிச் செல்லப்பட்டாளாம். பிறகு இது பற்றி சண்டைகள் நடந்ததாம். சீதையை ராமர் மீட்டாராம். இச்சண்டையில் வானரமார்கள் நல்ல உதவி செய்தார்களாம். கடலைக்கடக்க ராமேஸ்வரத்தில் அணுமார்கள் பாலம்கூட கட்டினார்களாம். ராவணனுக்கு தலைகள் பத்தாம்; கைகள் இருபதாம்; கால்மட்டும் இரண்டாம்; மிகவும் கொடியவனாம்; பராக்கிரம சாலியாம்; மனோ திடமுடையவனாம்; நல்ல அறிவும் பக்தியுமுடையவனாம்.

ராவணன் இலங்கையை அரசாண்டு வந்தானாம்; நல்ல குணங்களிருந்தும் ராமன் மனைவி சீதையைத் தூக்கிக் கொண்டு போன செய்கையினால் பல நாள் போராட்டத்தில் இறுதியாக ராவணன் ராமன் கையால் மாண்டு போய்விட்டானாம். இச்சண்டையில் ராமருக்கு ராவணன் தம்பி விபீஷணன் பல ரகசியங்களைச் சொல்லிக்கொடுத்து ராமருக்கு உதவி செய்ததற்கு பராட்டி ஆள்வார் பட்டமும் சூட்டி ராஜ்யத்தில் முடியும் சூட்டி வைத்தார்களாம். ராமன் காட்டுக்கு 14 வருடம் போகும்படி ஏற்பட்ட காரணத்திற்காக தசரதன் புத்திர எக்கத்தில் மாண்டாராம். ராமருடைய சிறுப்பை வைத்து அயோத்தி 14 வருடம் ராஜ்ய பரிபாலனம் செய்யப்பட்டதாம். இதன் பிறகு ராமனும் சீதையும் அயோத்திக்கு வந்தார்களாம். ஒரு நாள் ஒரு வண்ணான் தனது குடும்பச் சண்டையில் ராவணன் தூக்கிக்கொண்டு போன சீதையை மீண்டும் அழைத்துக் கொண்டதைப்பற்றி ராமனை மிகவும் கேவலமாகப் பேசிக் கொண்டிருந்தானாம். இதற்காக மீண்டும் சீதாதேவியைக் காட்டுக்குக் கொண்டுபோய் தனியே விட்டு விட்டு வந்தார்களாம். அது சமயம் சீதைக்கு வயிற்றில் கர்ப்பமிருந்ததாம். காட்டுக்குப் போனபிறகு ஒரு ரிஷியின் ஆச்ரமத்தில் தங்கி ரிஷியின் தபோ மகிமையால் மற்றொரு குழந்தையும் பெற்று இரண்டு குழந்தைகட்கு சீதை தாயாரானாளாம்.

இக்காரணங்களால் மேலும் சீதை மீதும் அவள் கற்பைப்பற்றியும் அதிகம் சந்தேகப்பட்டு ராமன் சீதையை தீயில் குளித்து வந்தால்தான் தனது சந்தேகம் நீங்குமென்று சொல்ல சீதையுமப்படியே நெருப்பில் மூழ்கி உயிர் போகாது உயிருடன் எழுந்து வந்தாளாம். பிறகே ராமருக்கும் சீதைக்கும் பட்டாபிஷேக விழா சிறப்பாக நடந்ததாம். இது ராமாயணக் கதையிலுள்ளது.

இச்சம்பவங்களும் மக்கள் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்த மற்ற பொய்க் கூற்றுகளேயாகும். கற்பனைக்கும் ஒரு எல்லை யுண்டு. அளவுகடந்த கற்பனைகளும் அர்த்தமற்ற பொய்க்கூற்று களும் அறிவுடையவர்களால் கேவலமாகவேதான் கருதி ஒதுக் கப்படும்.

சீதையின் பிறப்புக்கும் தாய் தந்தையர்கள் யார்? என் பது புலனாகவேயில்லை. சீதை கற்பு கெட்டவள் என்பதாக அவளுடைய புருஷன் ராமனால் பல சமயம் சந்தேகப்பட்டு இழிவாகவும் கேவலமாகவும் நடத்தப்பட்டதாக அக் கதைகள் கூறுகின்றன.

இப்பொய்க்கதைகளை நம்பிக்கொண்டு ராமருக்கும் சீதை க்கும் கோவில் கட்டிவைத்து கடவுளாக மதித்து பிரார்த்தனை களும் ஆராதனைகளும் வருட உற்சவங்களும் நடத்துகின்றார் கள். மற்றும் பல பக்தர்கள் தினசரி ஒருதடவை "ராமா ராமா" என்று கூறினால் சகல பாவங்களும் மன்னிக்கப்பட்டு மோட்சம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள்.

இராமாயணை காலட்சேபத்தால் வயிறு பிழைக்கும் பார்ப் பனச்சோம்பேறிகள் தினசரி வீதிச்சந்திகளில் உட்கார்ந்து கொண்டு ராமாயணம் படித்து ராமர் சீதாதேவி பட்டாபி ஷேகம் என்று கூறி பொதுமக்கள் பொருளை இன்றைக்கும் கொள்ளையடிக்கிறார்கள்.

இதை எடுத்து விளக்கிக் கூறுகின்றவர்களை "நாஸ்திகன்" என்றும் "மதவிரோதி" என்றும் புராண நம்பிக்கைக்காரர்கள் சொல்லுகின்றார்கள். பொய்யும் புரட்டும் கற்பனைகளும் நிறைந்த இராமாயணக் கதையை அடிப்படையாகக் கொண்ட ராம ராஜ்யத்தை நிலை நாட்டப்போவதாகக் காந்தியாரே சொல்லுகின்றார். ராம ராஜ்யத்திற்கு விளக்கம் கேட்டால் "எனது ராமன் வேறு" என்று காந்தி பதில் கூறுகிறார். இராமா யணக்கதையை சுயமரியாதை யுணர்ச்சியோடும், பகுத்தறிவு உணர்ச்சியோடும் படிக்கும் மக்கள் உண்மையில் இராமாயணக் கதைகளையும் மற்றுமுள்ள பொய் புராணக் குப்பைகளையும் தீயிட்டுப் பொசுக்க வேண்டுமென்றுதான் சொல்லுவார்கள். சுயமரியாதையற்றவர்களும், பகுத்தறிவற்றவர்களும், பார்ப்பன அடிமைகளும் ஹிந்துமார்களுமதான் இராமாயணத்திற்கும் அதி

சுயமரியாதை இயக்கம்.

(ஈ. வெ. ராமசாமி.)

சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் 1925-ல் என்னால் துவக்கப்பட்டது யாவரும் அறிந்ததேயாகும். அதைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியவர்களுக்கு அதன் கொள்கை என்ன? அது என் துவக்கப்பட்டது? என்கின்ற விஷயம் முதலில் எடுத்துக்கூறவேண்டியது அவசியமல்லவா? அதற்குமுன் என்னைப் பற்றியும் பற்றி சில வார்த்தைகள் சொன்னால்தான் என்னைப் பொறுத்தவரை நான் செய்தது சரியா, தப்பா என்பது விளங்கும்.

இளமையில் நம்பிக்கை.

எனக்கு சிறு வயது முதற்கொண்டு ஜாதியோ மதமோ கிடையாது. அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால் கலைக்கும் கவிதைத்திறத்திற்கும் கம்பர் கற்பனைத் திறத்திற்கும் அடிமைப்பட்டு மானங்கெட்டுப் பக்திசெலுத்தமுடியும்.

தாய் தகப்பன் யார் என்று தெரியமுடியாத ஆண்டாளையும் சீதையையும் தெய்வங்களாக்கி புராணம் எழுதி வயிறு பிழைக்கும் பகற்கொள்ளைக் கூட்டத்தார்களின் செய்கையை பகுத்தறிவு வாதிகள் நன்கு சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம். ஆண்டாளையும் சீதையையும் தெய்வங்களாக மதித்து தினசரி பிரார்த்தனை செய்யும் மக்கட்கு கோபம் வராம்; ஆண்டாளையும் சீதாதேவியையும் பக்தியாக வணங்கும்படி சொல்லி பணம் கொள்ளையடிக்கும் சோம்பேறி கூட்டத்தார்களுக்கும் அவசியம் கோபம் வரலாம். பொய்ப் புராணக்குப் பைகளை மக்கள் நம்பி பொருள் இழந்து அவமதிப்பும் இழிவும் பெற்று கஷ்டப்படாமலிருக்கும்படி செய்யவேண்டுவது பகுத்தறிவு வாதிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகிய அறிஞர்களின் கடமையாகும்.

ஆனால் நிர்ப்பந்த முள்ள இடத்தில் போலியாகக்காட்டிக்கொண் டிருந்திருப்பேன். அது போலவே கடவுளைப்பற்றியும் மனதில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும்இல்லை. நான் செய்யவேண்டுமென்று கருதியகாரியம் எதையும் கடவுள் கோபிப்பாரே என்றோ தண்டிப்பாரே என்றோ கருதி (எந்தக் காரியத்தையும்) செய்யாமல் விட்டிருக்க மாட்டேன். கடவுள் மகிழ்ச்சி யடைவார் என்று கருதியோ, சன்மான மளிப்பாரென்று கருதியோ (எனக்கு அவசியமென்று தோன்றாத) எந்தக்காரியத் தையும் செய்திருக்கவுமாட்டேன்.

எனது வாழ்நாளில் என்றைக்காவது ஜாதிமதத்தையோ கடவுளையோ உண்மையாக நம்பி இருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன். இதற்கு முன்பும் பல தடவை யோசித்திருக் கிறேன். எப்பொழுதிருந்து எனக்கு இவைகளில் நம்பிக்கை யில்லையென்றும் யோசித்து யோசித்துப் பார்த்திருக்கிறேன். கண்டு பிடிக்கமுடியவே இல்லை.

பள்ளிவயதில் அநுபவம்.

எனது ஆறாவதுவயதில் நான் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத் திற்கு அனுப்பப்பட்டேன். அப்பள்ளிக்கூடம் ஈரோடு டவுனுக் குச் சற்று விலகிய தூரத்தில் இருந்தது. (இப்போது அது நடு ஊராய் விட்டது.) அப்பள்ளிக்கூடத்தைச் சுற்றி வாணியச் செட்டிமார்களின் வீடுகள்உண்டு. எண்ணெய்ச் செக்கு சதாஆடிக் கொண்டு இருக்கும். மூங்கிலில் பாய், முறம், கூடை பின்னுகின் றவர்கள், தெருஓரங்களில் குடிசைக கட்டிக்கொண்டு தங்கள் வேலை செய்வார்கள். சில முஸ்லீம்கள் அங்கும் குடிசை ரூபமாக அங்கே உண்டு.

"பொழங்கக்கூடாத ஜாதி"

ஆகவே அப்பள்ளிக்கூடத்தைச் சுற்றி இருந்த மக்கள் வாணியச் செட்டிமார், வேதகாரர்கள், சாயபுகள் ஆகியவர்கள். அந்தகாலத்தில் இவர்கள் வீட்டில் மற்ற ஜாதியார்கள் என்ப வர்கள் எவ்வித உணவும் அருந்த மாட்டார்களல்லவா? ஆகையால் என் வீட்டார்கள், நான் பள்ளிக்குப்போகும்போது எனக்கு ஞா பகமாய்சொல்லியனுப்புவார்கள். என்னவென்றால் "அங்குளள ஜாதியார், 'பொழங்கக்கூடாத" ஜாதிக்காரர்கள். அவர்கள் வீட் டில் தண்ணீர் குடித்துவிடாதே. வேண்டுமானால் வாத்தியார் வீட்டில் வாங்கிக்குடி" யென்று சொல்லியனுப்புவார்கள். அது போலவே இரண்டொரு தடவை வாத்தியார் வீட்டில் தண்ணீர்

கேட்டேன். வாத்தியார் ஓதுவார் ஜாதி. மாமிசம் சாப்பிடாதவர்கள். அவர்கள் வீட்டுச் சிறுபெண் எனக்குத் தண்ணீர் கொடுக்கும்போது ஒரு வெண்கல டம்ளர் கீழே வைத்து அதில் தண்ணீர் ஊற்றி, எடுத்துத் தூக்கிக் குடிக்கச் சொல்லும். நான் குடித்த பிறகு கவிழ்த்து வைக்கச்சொல்லும். பிறகு அதன் மீது தண்ணீர் ஊற்றி அதை எடுத்து நிமிர்த்தி உள்ளேயும் தண்ணீர் ஊற்றிக்கழுவி உள்ளே எடுத்துக்கொண்டுபோகும். இதற்குள் எனக்குத் தூக்கிக் குடிக்கத்தெரியாமல் குடிக்கும்போது பாதி தண்ணீர் மூக்கிலும் உடல் மேலும் விழும். பாதி தண்ணீர் தான் வாயில் விழும். மூக்கில் விழுந்த தண்ணீரால் புரைபோய் இருமல் வந்து வாய்த்தண்ணீர் கீழே விழும். இதையெல்லாம் பார்த்து அந்தப்பெண் அசிங்கப்படும். சில சமயம் கோபித்து வையும். அதனால் நான் தாகம ஏற்பட்டாலும் வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்பதில்லை. வாணியச் செட்டியார் பிள்ளைகள் வாத்தியார் வீட்டில் தாகத்திற்குத் தண்ணீர் கேட்பதில்லை. எழுந்து நின்று பெருவிரலை வாத்தியாருக்குக் காட்டியவுடன் "போய் விட்டுச்சீக்கிரம் வா" என்பார். பையன் ஓடோடி அவன் வீட்டிலோ, அவனது வீடு சற்று தூரமாய் இருந்தால் சமீபத்தில் உள்ள ஒரு செட்டியார் வீட்டிலோ குடித்து விட்டு ஓடிவருவான். ஒரு நாள் நானும் அங்கு போய்த் தண்ணீர் சாப்பிடலாமென்று கருதி ஒரு செட்டியார் பையன் எழுந்து பெருவிரல் நீட்டும்போது நானும் நீட்டினேன். இருவரையும் போகும்படி வாத்தியார் தலையாட்டினார். இருவரும் ஓடினோம். வாத்தியார் "ராமா நீ எங்கே ஓடறை?" என்றார் "தண்ணீருக்கு ஐயா!" என்றேன் "தண்ணிக்கு அவன் கூடப்போறயே?" என்றார். பிறகு நான் வாத்தியார் வீட்டுக்கு (அதாவது ஒரு கூரைச் சாலையில் ஒரு பாகம் நிரைச்சல் கட்டித் தடுத்து அதில் வாத்தியார் குடியிருக்கிறார்.) போய் தண்ணீர் குடித்து தண்ணீரை தேகமெல்லாம் சிந்திக் கொண்டு வேஷ்டியையும் நனைத்துக்கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டேன். அடுத்த நாள் தண்ணீர் தாகமெடுத்தபோது ஒரு செட்டியார் பையனுடன் கூடப்போகத் தீர்மானம் பண்ணிக்கொண்டு அந்தப் பையனிடம் பேசிவைத்து அவர் தண்ணீர் குடிக்கப் பெருவிரலைக் காட்டுமுன்பே நான் ஒன்றுக்குப் போகப் கேட்பவன்போல் எழுந்து நின்று ஆள்காட்டி விரலை நட்டத்தில் நீட்டிக் காட்டினேன். வாத்தியார் தலையை அசைத்தார். நான் வாத்தியார் வீட்டுக்குப் பின்புறம் போய் நின்று கொண்டேன். செட்டியார் வீட்டுப் பையன் தண்ணீர் குடிக்க அனுமதி கேட்டுக்கொண்டு வந்தான். அவன்

வீடும் பின்புறமாய் போகக்கூடியதுதான். அவனும் நானுமாக அந்தச் செட்டியார் வீட்டுக்கு ஓடினோம். அவன் லோட்டாவில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். நான் சாதாரணமாக எங்கள் வீட்டில் குடிப்பதுபோல் லோட்டா விளிம்பை உதட்டில் வைத்து குடித்தேன். அத்தச் செட்டியார் வீட்டம்மாள் என்னைப் பார்த்ததும் "நீ நாய்க்கர் வீட்டுத் தம்பியா?" என்றார். நான் "ஆமாம்" என்றேன். "இங்கே தண்ணீர் குடிக்கிறயே! உங்க ஆட்டிலே ஒண்ணும் சொல்லமாட்டாங்களா?" என்றார். "சொல்லமாட்டாங்கோ" என்று சொல்லிவிட்டு ஓடினேன். அந்தப் பையனும் என்கூட ஓடி வந்தான். அதற்குள அந்தம்மாள் அந்தப்பையனைக் கூப்பிட்டு "டே பழனியப்பா அந்தச் சொம்பைக் கழுவி உள்ளே வைத்துவிட்டுப் போடா" என்றார். அதேமாதிரி அந்தப்பையன் லோட்டாவைக் கழுவிவைத்து விட்டு வீதி வழியாக முன்புறம் பள்ளிக்கூடத்திற்கு வந்தான். நான் போன வழியிலேயே பின் புறமாக பள்ளிக் கூடத்திற்கு வந்தேன். பிறகு இப்படியே—இதே மாதிரியாக மற்றொரு சமயம் வேதகான் வீட்டில் தண்ணீர் சாப்பிட் டேன். இது மெல்ல மெல்ல அவர்கள் வீட்டுப் பலகாரங் களும் பிறகு அவர்கள் வீட்டில் விசேஷ காலங்களில் செய்யப் படும் காய்கறி சாமான்களும் கூடச் சாப்பிடும்படியாகச்செய்து விட்டது. எங்கள் வீட்டுக்கு இந்தச் செய்தி எட்டியது. வீடோ நல்ல பணம் வருவாய் எற்பட்டு பணம் பெருகி அப் பொழுதுதான் பார்ப்பனர்களைப்போல் நடக்க ஆரம்பித் திருக்கலாம். எந்நேரம் பார்த்தாலும் ஆச்சாரம், அனுஷ்டா னம் என்கின்ற வார்த்தைகள் தான் உச்சரிக்கப்படும். என் றாலும் என் தகப்பனாருக்கு இதைப்பற்றி (நான் கண்ட இடத்தில் சாப்பிடுவதைப் பற்றி) அதிகமான கவலை கிடையாது. "சீச்சீ இனி அப்படிச் செய்யாதே" என்று சொல்லிவிடுவதோடு அவர் வேலை ஒழிந்துவிடும். என் தாயார் ஏதோ முழுகி விட்டது போல் கருதி மிக துயரப்படுவார். என்ன பண்ணியும் காரியம் மிஞ்சிவிட்டது. சாயபுமார் பையன் கொடுத்த பண்டம் கூடச் சாப்பிட்டு விட்டேன் என்பது என் வீட்டிற்கு தெரிந்து விட்டது. இதற்குள் என் பள்ளிப்படிப்பு எனது பத்தாவது வருஷத்திற்குள்ளாகவே முடிந்து விட்டது. எனென்றால் என் நிஜ நேசகம் தின்னாத (தொழுங்கக்கூடாத) ஜாதியாருடன்தான் அதிகம், அதனாலே நான் முறடனாகிவிட்டேன் என்பது அவர்கள் எண்ணம். காலில் விலங்கு இடப்பட்டேன். அந்த விலங்குகளுடனேயே அந்தப்பிள்ளைகளுடன் கூடித் திரி வேன். ஒரு பதினைந்து நாள் இரண்டு கால்களிலும் விலங்குக்

கட்டை போடப்பட்டேன். அப்பொழுதும் இரு தோளிலும் இரண்டு விலங்குகளைச் சுமந்துக்கொண்டு திரிந்தேன். அப்போதும் அந்தப் பிள்ளைகளுடன்விளையாடப் போய்விடுவேன்.

"விதண்டாவாதம்"

கடைசியாக நான் அப்பள்ளிக்குப்போவது நிறுத்தப்பட்டு சர்க்கார்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டேன். அதாவது முனிசிபல் பிரைமரிபள்ளிக்கூடத்துக்கு. அதுவும் 2-வருத்திலேயே (10,12-வது வருஷத்திலேயே) நிறுத்தப்பட்டு எங்கள் கடையிலேயே வியாபாரத்தில்போடப்பட்டு விட்டேன். அதில் எனக்குள்ள வேலை, மூட்டைகளுக்கு விலாசம் போடுவது, சாக்குகள் எலங்கூறுவது, ஒழிந்த நேரங்களில் என் சொந்த வேலையாம் புராணங்களைப்பற்றி விவகாரம் செய்வது. இந்தவேலை எப்படி ஏற்பட்டதென்றால் எங்கள் வீட்டில் சந்நியாசிகளுக்கும் பாகவதர்களுக்கும் சமயப் பிச்சைக்காரர் களுக்கும் (பார்ப்பனர்களுக்கும்) வித்துவான்களுக்கும் சொம்பவும் செல்வாக்கு இருந்ததினாலும் அவர்களைக் கண்டு எனக்குப் பிடிக்காததாலும், அவர்கள் சொல்வதைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்து மறுத்துச் சொல்ல ஆரம்பித்து 'விதண்டாவாதக்' கேள்விகள் கேட்க ஆரம்பித்து மெல்ல மெல்ல அதுவே ஒழிந்த நேரவேலையாகவும் அதுவே இளைப்பாறுவதற்கு ஒரு துணைக் கருவியாகவும் எனக்கு உண்மையிலேயே உற்சாகமுள்ள வேலையாகவும் நேர்ந்துவிட்டது. நான் புராணங்களையோ வேறு எந்தத்தனிப்பட்ட புஸ்தகங்களையோ படித்ததில்லை யென்றாலும் சைவம், வைணவம் ஆகிய இருசமய சம்மந்தமாக உள்ள கதைகளோ, சரித்திரங்களோ சதாசர்வ காலம் எங்கள் வீட்டில் இரு சமய "பக்தர்" களாலும் பண்டிதர்களாலும், காலட்சேபம் செய்யப்பட்டு வந்தது. என்? பணம் வந்து குவியும் போது தர்மம் செய்து தர்மப் பிரபு பட்டம் வாங்க வேண்டாமா? இவர்களைத்தானேதான பாத்திரங்களாகப் பேசப்படும். ஆதலால் இவர்கள் எங்கள் வீட்டில் குவிந்து கிடப்பார்கள். என்தாயார் இவர்கள் அளப்புகளை அதிக "பக்தி சிரத்தை" யுடன் கேட்டுக்கொண்டேயிருப்பார். தகப்பனாருக்கு இது ஒரு பெருமையாகவும் திருப்தியாகவும் இருக்கும் இதனால் எனக்கு சமய சம்மந்தமான—புராண சம்மந்தமான விஷயங்கள் தானாகவே தெரியவரும். அவற்றிலிருந்தே நான் பல கேள்விகள் கேட்கவும் அவர்கள் (பக்தர்கள், பண்டிதர்கள்) பலகேள்விகளுக்கு பதில்தாருமாறாகவும் ஆளுக்கு ஒரு விதமாகவும் சொல்லவுமாய் இருந்தே எனக்கு அதிக உற்சாகத்தை விளைவித்ததோடு என்னை ஒரு 'கெட்

டிக்காரப் பேச்சுக்காரன்', என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொல்லுவதான நிலைமை ஏற்பட்டது. என் தகப்பனார் நான் இப்படி "விதண்டாவாதமான" கேள்விகேட்பதில் கோபம் வந்தாலும் உள்ளுக்குள் தனது மகன் இப்படி புத்தியாய் பேசுகிறானே என்கிற மகிழ்ச்சி உண்டு.

இந்தச்சம்பவங்கள்தான் எனக்கு மேலும் மேலும் ஜாதி மதத்திலும், கடவுள் சாஸ்திரங்கள், ஆகியவைகளிடத்திலும் நம்பிக்கையில்லாமல் போகும்படி செய்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

அனுபவத்திற்கு முரண்

ஆனால் "சுற்றுச்சார்புதான் (Association and Surrounding) ஒரு மனிதனின் வாழ்க்கை வட்சியம், கொள்கை ஆகியவர்களுக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. அனுபவத்தில் பெரிதும் அப்படித்தான் இருந்தும் வருகிறது. ஆனால் என்னைப்பொறுத்தவரை ஒரு துறைபிலாவது சுற்றுச்சார்பு என்னை அடிமைப்படுத்தியதாகச் சொல்லுவதற்கு இடமே கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருதன்மையிலும் என்னைச் சுற்றி இருந்த சுற்றுச்சார்பு, சகவாசம் ஆகியவைகளுக்குமாறாகவே இருந்து வந்திருக்கிறேன்.

உதாரணமாக எனது கல்லவாலிப பருவத்தில் 20 முதல் 32 வயது வரையில் சகபாடிகள் எறக்குறைய அந்தரங்க சகபாடிகள் எல்லோரும்மதுவருந்துபவர்களாவார்கள். அது மாத்திரமா? என்னிடத்தில் அதிக காதல் உள்ள சர்க்கார் அதிகாரிகள் ஜமீன், மிராசுதாரர்கள் ஆகியவர்களும் மது வருந்துபவர்கள். பேல்கண்ட வயதில் அதேகமாக இரவெல்லாம் இந்த கூட்டத்தாருடனே கோலாகலமாய் இருந்து, காலை 6 மணிக்கு வீட்டுக்குவந்து மொத்துச்சாவியை எடுத்துக்கொண்டு கடை திறக்கப்போய்விடுவேன். ஒரு மாதத்திரிக்கு 4 பாட்டல் 5 பாட்டல் (பிராந்தி) உடைபடும். எனக்கும் மாசத்தில் இந்தச்செலவு சுமார் 40, 50. ரூபாய் ஆகும். நானே என் கையால் டம்ளரில் ஊற்றி சோடா கலந்துகொடுப்பேன். சிலர் குடித்து விட்டு போதையில் என்மீது துப்புவார்கள். ஒரு காலத்தில் ஒரு டிப்டி கலெக்டரும் சால்ட் அகிஸ்டெண்ட் கமிஷனரும் நான் ஊற்றிக்கொடுத்ததையே சாப்பிட்டுவிட்டு என்னைப்பிடித்துக் கீழேதள்ளி என் வாயில் பலவந்தமாக ஊற்றினார்கள். அப்படியெல்லாம் இருந்தும் என்னை அந்த சவ

காசமும் சுற்றுச்சார்பும் அது (மது அருந்தினால்) எப்படி இருக்கும் என்று யோசிக்கக் கூடத்தூண்டவில்லை. என் மனைவி யாருக்கு என் மீது அடிக்கடி சந்தேகம் தோன்றும். இம் மாதிரி கூட்டத்தில் இருந்து வீட்டுக்குப்போன உடன் என் வாயை ஊதிக்காட்டச் சொல்லுவார்கள். நான் கிராக்கி செய் வேன். கட்டாயத்தில் வாயைமோந்து பார்த்து திருப்தி அடை வார்கள்.

இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் சுற்றுச் சார்பு எதுவும் என்னை வசப்படுத்திக்கொள்ளவில்லை என் பதற்கு ஆகவேயாகும். இனியும் அம்மாதிரியான சம்பவங்களே அதி கப்படியாய்க் காணப்படுகின்றன. அது என்ன காரணம் என்பது எனக்கு விளங்கவில்லை.

பொறுப்பு.

இது இப்படியிருக்க, நான் இந்தக் கூட்டத்தில் இப்படிப் பட்ட கேளிக்கையில் இருந்துகொண்டே எனது வர்த்தகத் தொழிலில் நான் ஒரு அளவுக்கு வெற்றி பெற்றேன். எனது தகப்பனார் நம்பிக்கைக்குப் பாத்திரனானேன். என் தகப்பனார் இருக்கும்போது எங்கள் வியாபாரத்திற்கு தன் பெயரை எடுத்து விட்டு என் பெயர் கொடுக்கப்பட்டு விட்டது. ஊர்ப்பெருமை விஷயங்களிலும் என் தகப்பனார் ஒவ்வொன்றி லும் இருந்து விலகிக் கொண்டு என்னையே தள்ளி விட்டார். எங்கள் ஊர்ப்பொதுக் கோவில்கள், சர்க்கார் தேவஸ்தான சம்மந்தமான காரியங்கள் பெரிதும் எங்கள் வீட்டுச் சொந்தக் காரியம் போலவே நடைபெறும். ஆகலால் அவற்றிற்கு என்னை யே முதன்மையாக்கி விட்டார்கள். ஒரு சமயம் இதனால் எனக்கு கடவுள் பக்தி ஏறபடலாம் என்கின்ற எண்ணமோ என்னமோ தேவஸ்தானக் கமிட்டி காரியதரிசியாகவும் தலைவ னாகவும் ஆக்கப்பட்டு விட்டேன்.

இப்படி யெல்லாம் இருந்தும் எற்றுக்கொண்ட காரியத்தைச் சரியாய்-உண்மையாய்ச் செய்வதென்பதல்லாமல் அந்த காரி யங்களில் எனக்குப் பிடிவாதமான நம்பிக்கை பென்பதே ஏற்பட்டது கிடையாது. எப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத காரி யத்தை ஏற்றுக்கொண்டாலும் நாணயமாகவும் அதிகவலையாக வுமே செய்து வருவேன்.

பிடிவாதமில்லை.

நிற்க, ஜாதி மதக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் கடவுள் என்ற மூட நம்பிக்கை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் மாத்திரம் எனக்கு உண்மையான நம்பிக்கையும் உணர்ச்சியுள்ள சக்தியும் உண்டு. அதுவும் நான் தான் செய்யவேண்டுமென்றோ, அதற்காகத் தான் இருக்கிறேன் என்றோ கருதுவது இல்லை.

என்ன காரணத்தாலோ நாம் சவுகியமாக உயிர் வாழ்கின்றோம். எப்படியோ உயிர் வாழ்வுக்கு மற்ற எவருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாத நிலையில் இருந்து வருகின்றோம். மனிதனுக்கு இந்த இரண்டு காரியந்தான் மேலான சம்பத்து ஆகும். அதாவது உழைக்க உறுதியும் ஆசையும்—அதாவது சோம்பேறித்தனமும் கஞ்சப் பிணித்தனமும் இல்லாத, திடம் உள்ள சரீரமும் தனது வாழ்வில் எந்தத்துறைக்கும் மற்றவர்களை எதிர்பார்க்கவோ, தனக்குச் சரியென்று தோன்றிய அபிப்பிராயங்களை-- முடிவுகளை தனது வாழ்க்கைக்காக—வாழ்க்கை நலத்துக்காக மற்றவர்களின் தயவுக்காக மாற்றிக்கொள்ளவோ வேண்டிய அவசியமில்லாத-சாகும் வரை சுதந்திர—உணர்ச்சியுடன் இருக்கத் தகுந்த நிலை எதுவோ அதுவே மேல் கண்ட உயர்ந்த சம்பத்காகும். அப்படிப்பட்ட நிலையில் நான் இருப்பதால் (இருக்கிறதாக நான் நினைத்துக்கொண்டிருப்பதால் அந்த) நிலையை பாழாக்குவதற்கு இஷ்டமில்லாமல் பயனுள்ள வேலையென்று எனைக்கு கருதுகின்றேனோ அதைச் செய்கிறேன் என்பதல்லாமல் வேறு எவ்விதப்பிடிவாதமும் எனக்குக்கிடையாது.

வேலை அவசியம்.

நாளை நான் சாகும்போது எனக்கு உணர்வு இருந்தால் நிம்மதியுடன் சாவேனே ஒழிய ஒரு குறையும் இருப்பதாக நான் கருதமாட்டேன். எதையும் நான் குறையாய்விட்டு விட்டுப் போகிறேன் என்று அதிருப்திப்படமாட்டேன் நான் ஜீவனோடிருப்பதால் அதற்கு ஒரு வேலை இருந்தானே ஆகவேண்டும்? எதாவது ஒரு வேலையில்லாமல் உயிர்வாழ முடியாதே என்று கருதி எதோ ஒரு வேலை என்பதில் இதை அதாவது ஜாதி, மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில் அதற்காக என்ன செய்யவேண்டும் என்று கருதுகிறேனோ

அந்த வேலையைச் செய்கிறேன். இந்த உணர்ச்சி வலுத்துக்கான் அதே முக்கியமானதும், முடிவானதுமான வேலையென்று இறங்கி விட்டேன். இந்த எண்ணத்தின்மீதே சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தேன். இந்த எண்ணம் ஒருகூடினால் மனித சமூகத்திம் உள்ள போராட்டங்கள் மறைந்து விடும், தனிப்பட்ட மனிதர்களுக்குள்ள குறைகள் நீங்கிவிடும்; தனக்கு என்ற பற்றும் ஒழிந்து விடும். உற்சாகத்துக்காக வேண்டுமானால் போராட்டங்களும் குறைகளும் அதிருப்திகளும் கவலைகளும் இருக்கலாம். அதாவது பண்டிகைக்காக ஒப்வெடுத்துக்கொண்ட மக்கள் பலர் கூடி சதுரங்கமோ, சீட்டாட்டமோ விளையாடும்போது யோசனைகள், கவலைகள், அதிருப்திகள் காணப்படுவதுபோல் இயற்கையின் ஆதிக்கத்தால் நமது வாழ்வுக்கு அவசியமில்லாததும் பாதிக்காததுமான யோசனை, கவலைகள் முதலியன காணப்படலாம். இவை எந்த மனிதனுக்கும் மனிதனல்லாத மற்ற எந்த ஜீவனுக்கும் உயிருள்ளவரை இருந்துதான் தீரும். "சரீரமில்லாத ஆத்மாவுக்கும் கண்ணுக்குத் தெரியாத சூட்சும சரீரத்திற்கும்" கூட "மோக்ஷமும்" "முத்தியும்" கற்பித்திருப்பதில் ஜீவனுக்கு வேலையில்லாமலும் அநுபவமில்லாமலும் மோக்ஷம்-முத்தி கற்பிக்க முடியவில்லை. ஆதலால் எதாவது ஒரு வேலை செய்ய வேண்டி இருந்து தீரவேண்டியதை உத்தேசித்து இந்த வேலையை நான் மேற் கொண்டேன்.

நிஷ்காமிய கர்மம் யாது?

இதைத்தான் நிஷ்காமிய கர்மம் என்றுசொல்லலாம். மற்றபடி காமிய கர்மத்துக்குப் பலன் இல்லையென்றும் சொல்லலாம் நிஷ்காமிய கர்மத்துக்குத்தான் பலன் உண்டு என்றும் சொல்லப்படுவது முன்னுக்குப்பின் முரணான கருத்தேயாகும். எப்படியெனில் நிஷ்காமிய கர்மமென்பதை அதாவது பயனை எதிர்பார்க்காத காரியத்தை ஒரு மனிதன் என் செய்யவேண்டும்? நிஷ்காமியமாய்ச்செய்தால்தான் பலன் உண்டு என்றாரே "ஒரு பலன் எற்படவேண்டும்" என்பதற்காக வேண்டி செய்வது என்பது அருத்தமாகிறது அல்லவா? ஒரு மனிதன் ஒரு பலனை எதிர்பார்த்து காரியம் செய்கிறது என்பதில் எப்படிப்பட்ட காரியமானாலும் அதன் பலனை அவனைப் பீடித்துத்தான் தீரும். ஆனால் உண்மையிலேயே நாம் ஜீவனுள்ள வரையில் எதாவதுஒரு காரியம் செய்ய வேண்டுமே என்பதற்காக எதுவும் அந்த வேலையைத்தெரிந்தெடுக்க நமக்குச் சரியாகவோ தப்பாகவோ உரிமையிருக்கிறது என்பதாகவே, இந்த வேலை சுயமரியாதை இயக்க வேலை செய்து வருகிறேன். ஆனால் இந்த வேலை நமக்கு எப்

போதாவது ஏமாற்றத்தைக் கொடுத்து சலிப்பாக வேலை செய்யச் செய்யவில்லை; உற்சாகத்தையே ஊட்டி வருகிறது.

சுயமரியாதை தத்துவம்.

சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் உலகம் ஒப்புக்கொண்டதேயாகும். என்னவென்றால் காரணகாரிய தத்துவ உணர்ச்சியையும் காரணகாரிய விசாரணையையும் உலகம் எற்றுக்கொண்டுவிட்டது. மனித வாழ்வின் ஒவ்வொரு எண்ணத்திற்கும் தோற்றத்திற்கும் காரண காரியயத்தை மனித ஜீவன் தேடுகின்றது. இயற்கையையே ஆராயத் தலைப்பட்டாய்விட்டது. விபரம் தெரியாத வாழ்வை அடிமை வாழ்வு என்று கருதுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமே அதுதான். எந்தக் காரியமானாலும் காரண காரியமறிந்துசெய்; சரியா, தப்பா என்பதை அந்த காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டுவிடு: எந்த நிர்ப்பந்த சமயத்திலும் அதன் முடிவுக்கு மரியாதை கொடு என்கின்றது. அதுதான் சுயமரியாதை. மனிதன் சரியென்று கருதிய எண்ணங்களுக்கும் முடிவுகளுக்கும் மரியாதை கொடுப்பதுதான் சுதந்திரமாகும். சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் அதிக தூரமில்லை.

சுயமரியாதையே சுதந்திரம்.

இன்றைய சுதந்திர வாதிகள்சுதந்திரத்திற்காகச் சுயமரியாதையை அலக்ஷ்யம் செய்கிறார்கள். அதாவது அடிமை தேசத்தில் சுயமரியாதைக்கு இடம் எது என்கிறார்கள். இது உண்மையிலே மூடவாதம் என்று சொல்லுவோம். சுயமரியாதை அற்றவர்களுக்கு—சுயமரியாதை இல்லாதவர்களுக்கு சுதந்திரமேது என்பதுதான் சரியான வார்த்தையாகும்.

சுயமரியாதை இயக்கத்திற்குத்தான் சுதந்திர உணர்ச்சி தோன்றும்—சுதந்திரம் தேவைப்படும்; சுதந்திரத்திற்குச் சுயமரியாதை தேவைப்படாது. சுயமரியாதைக்காரனின் சுதந்திரம் எல்லாவற்றிலும் சுதந்திரம் இருக்கத்தக்கதாய் இருக்குமென்றும் சுதந்திரக்காரனின் சுதந்திரமோ அவனுக்கே புரியாது; புரிந்தாலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பொருத்ததாக மாத்திரம் இருக்கும்.

உதாரணமாக இன்று ஆசியல் சுதந்திரத்தை எடுத்துக் கொள்ளுவோம். இன்று ஆசியல் உலகில் இருவர் பெயர் அடிபடுகின்றது. ஒன்று தோழர் காந்தியார் பெயர் மற்

றொன்று தோழர் ஜவஹர்லால் பெயர். மூத்தியவர் இந்தியாவில் உலக அனுபவமுள்ள சோம்பல் கூட்டத்தார், மத உணர்ச்சியாளர் (மூட நம்பிக்கைகாரர்கள்) பழமைவிரும்பிகள் ஆகியவர்களது உலகில் மதிக்கப்படுகிறவர். அவரது சுதந்திரம் என்பதெல்லாம் பழமையை அனுபவிக்கச் சுதந்திரம் வேண்டுமென்பதே. பிந்தியவர் உலக அனுபவ மற்ற உற்சாகக்கார புதுமை விரும்பிகள் உலகத்தில் மதிக்கப்படுகிறவர் என்பதோடு குறிப்பற்று எதாவதொரு மாறுதல் வேண்டுமென்பவர். இந்த இரண்டு பேருக்கும் தெளிவானஞானம் இடையாது என்றே சொல்லலாம். ஏனெனில் சுதந்திரத்தின் யோக்கியதை யே— சுதந்திரம் விரும்புகின்றவர்களின் தன்மையே அவ்வளவுதான். எப்படியெனில் இருவர் கோரும் சுதந்திரம் இன்று உலகில் எந்தப் பாகத்தில் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அங்கெல்லாம் எறக்குறைய முழு மக்களும் சுயமரியாதை இல்லாமல் இருப்பதைக்காணலாம்.

காந்தியார் இந்து மதம் புனருத்தாரணம் ஆவதும் பழைய முறைகள் ஒழிக்கப்படுவதும் சுதந்திரம் என்கிறார். ஜவஹர்லால் பண்டிதர் இந்திய பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடுவது சுதந்திரம் என்கிறார். இவர்கள் இருவரும் கோரும் சுதந்திரங்களில் எது வந்தானாலும் அல்லது இரண்டும் வந்து விட்டாலும் மனித சமூகவாழ்க்கையில் உள்ள துன்பங்களில் எது ஒழிக்கப்பட்டுவிடும் என்று ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரம் சுயமரியாதை அளிக்காது என்பது விளங்கும். எவ்வளவு சுதந்திரம் எற்பட்டாலும் சுயமரியாதைக்குத் தேவை இருந்து கொண்டுதான் இருக்கும்

முழு சுயராஜ்யமுள்ள பிரிட்டிஷ், தேசத்தில் குடிகளுக்கு என்? ராஜாவுக்கே தன் இஷ்டப்படி கல்யாணம் செய்துகொள்ள சுதந்திரம் இல்லாமல் ராஜ்பத்தைதுறக்க வேண்டியதாகிவிட்டது என்றால்— அதுவும் ஜனப்பிரதிநிதிகளாக்-அதுவும் பொது ஜனங்களுடைய விருப்பம், ஆமோதிப்பு என்பவைகளின் பேரால் என்றால் ஜவஹர்லால் சுயராஜ்யத்தில் காந்தியார் சுதந்திரத்தில் மனிதனுக்கு கடுகளவாவது சுயமரியாதை இருக்க இடமுண்டா என்று கேட்கின்றோம்.

சுயமரியாதையின் பெருமை.

அப்படிக்கில்லாமல் சுயமரியாதை பெற்ற (சுயமரியாதைக்குப் பிறந்த) சுதந்திரமாய் இருந்தால் "காதலுக்கு" பிரிட்டிஷ்

ஆசுக்கு எற்பட்டதுபோல் விலங்கு இருக்குமா? என்று கேட்கிறேன். சுயமரியாதை என்பது 'என்போன்ற சாதாரண பணித்னால் 'கையாளப்பட்டதனால் அதன் பெருமை விளங்காமல் போய்விட்டது என்று சொல்லலாமே தவிர அதற்கு நிகர் உலகில் மனிதனுக்கு உயிரைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை யென்றுதான் சொல்லவேண்டும்.

இந்தப் பத்து வருஷகாலமாய் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வெகுசாதாரணமுறையில் எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில் நோட்போக்குப் பிரசாரமாக நடந்து வந்திருந்தாலும் அதற்கு எத்தனையோ இடையூறுகள் பல கூட்டங்களில் இருந்து-என்? சுயமரியாதைக் கூட்டத்தில் இருந்தவர்களுக்குள் இருந்து கூட—எற்பட்டு இருந்தாலும், ஒரு குடம் பாலுக்கு ஒரு சொட்டு விஷம் என்பதுபோல் தமிழ்நாடு, மலையாளநாடு, ஆந்திரநாடு ஆகியவைகளை சமுதாய இயலில் ஒரு கலக்குக்கலக்கி விட்டிருக்கிறது. மத இயலிலும் மகா பண்டிதர்கள் ஞானிகள், ஆச்சாரியார்கள் என்பவர்களையெல்லாம் மாறிக்கொள்ளச் செய்திருக்கிறது, தோழர் காந்தியாரையே பல காணங்கள் போடச் செய்து விட்டது.

பெண்கள் உலகில் உண்மையான சுதந்திர வேட்கையைக் கிளப்பி விட்டு விட்டது. கீழ் ஜாதி மேல் ஜாதி யென்பவைகள் ஓடுவதற்கு ஓட்டத்தில் ஒன்றுக் கொன்று பந்தயம் போகின்றன. கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் பெரிதும் குரல் ஆனுக்கும் புதிய வியாக்கியானங்கள் செய்யத் தலைப்பட்டு விட்டனர். தோழர் காந்தியாரோ அல்லது காங்கிரஸ் தொல்லையோ இல்லாமல் இருந்திருக்குமானால் இந்தியா பூராவையும் சுயமரியாதை இயக்கம் இன்னும் அதிகமாய் கலக்கி இருக்கும் என்பதோடு பார்ப்பனீயம் மாண்டு இருக்கும் என்றே சொல்லலாம்.

சுயமரியாதை இயக்கம் காந்தியாரை ஒரு அளவுக்கு மூளையில் உட்கார வைத்துவிட்டது. என்றாலும் பார்ப்பனீயம் வேறு ஆட்களைப் பிடித்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முன்வந்து விட்டது. ஆனபோதிலும் காந்தியம் பட்டு மாய்ந்து விட்டது என்பதில் சந்தேகமில்லை. அந்தப்பெருமை சுயமரியாதை இயக்கத்துக்கே உண்டு.

இனி இரண்டு மாதம் சென்றவுடனே ஜவஹர்லாலை சுயமரியாதை இயக்கம் மூலையில் உட்காரவைக்க முழுமூச்சில் முனையப்போகின்றது. சுயமரியாதை இயக்கம் இதுவரை செய்து வந்த

நரியைக் குதிரையாக்கிய அற்புதம்.

(அம்பலவாணன்.)

"பாண்டிய ராஜனிடம் மாணிக்கவாசகர் என்ற சைவ சமய பக்தர் அமைச்சராகயிருந்தார். அரசன் குதிரை வாங்கி வரும்படி கொடுத்த பொக்கிஷத்தைக் கொண்டு பக்தி மிகுதியால் சிவாலய திருப்பணி வேலைக்குச் செலவு செய்து விட்டார். இது விபரம் அரசனுக்குத் தெரிந்து அமைச்சரை அழைத்து வந்து குதிரை எங்கே? கொடுத்த ரூபாய் எங்கே என்று கடிந்து பேசி சிறைப்படுத்தி தண்டனைகளும் கொடுத்தார். மாணிக்கவாசகர் கடவுளிடம் முறையிட்டு அழுதார். கடவுளுடைய திருவருளால் பூதகணங்கள் நரிகளையெல்லாம்

பிரசாரத்துக்கு மேலாக, கேரள ஆந்திர கர்நாடக தேசம்மாத்திர மல்லாமல் இந்தியா முழுமைக்கும் பிரசாரம் செய்யப் போகின்றது. அதனது பழைய வாலிபர்கள் பெரும்பாலோர் வாழ்க்கைப் பருவம் அடைந்து விட்டதால் புதிய வாலிபர்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறது. ஏராளமான வாலிபர்கள் இருக்கிறார்கள். எனக்கு ஒரு சமயம் "குறை" ஏற்பட்டாலும் சுயமரியாதைக்கு குறை ஏற்படாது.

வாலிபர்களே தயாராய் இருங்கள்!

("நவமணி" ஆண்டுமலர்)

(இக்கட்டுரை தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களால் "நவமணி ஆண்டு" மலருக்காக பிரத்தியேகமாக எழுதப்பட்டது. இதில் "சுயமரியாதை" இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். அத்துடன் அவரின் சுயசரித்திரத்தையும் எழுதியிருப்பதால் நமது வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக முன் குடி அரசில் வெளியிட்டிருந்தோம். பகுத்தறிவு வாசகரும் தெரிந்து கொள்வதற்காக பகுத்தறிவிலும் வெளியிட்டிருக்கிறோம். விடுதலை வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக விடுதலையிலும் வெளியிடுவோம். ப—ர்)

பிடித்து குதிரைகளாகச் செய்து அரசன் முன் கொண்டுவந்து வரிசையாக நிறுத்தினார்கள். அரசன் அமைச்சரை மெச்சி அவருடைய பக்தியைப் பாராட்டி குதிரைகளைக் கொண்டு போய் கட்டிவைக்கும்படி உத்திரவு போட்டார். சில் மணி நேரங்கட்குப்பிறகு குதிரைகள் நரிகளாக மாறி ஊளையிட்டுக்கொண்டு திசைக்கு ஒன்றாக ஓடின.''

இந்தப் பொய்க்கற்பனைக் கதை மாணிக்கவாசகருடையசரித்திரத்திலும்திருவிளையாடல் புராணத்திலுமிருக்கின்றது. இக்கதையைப் படித்து பள்ளிக்கூட மாணவர்களும் அறிவு வளர்ச்சி பெறுகின்றார்களாம்! சைவ சமயப்பற்று மிகுதியால் ''எல்லாம் சிவபெருமான் திருவருள் செயல்'' என்றும் அற்புதச் செயல்களென்றும் சிவநேயச்செல்வர்கள் செப்புகின்றார்கள்.

ஒரு தமிழ் பண்டிதர் ஹைஸ்கூலில் வாத்தியாராக இருந்துகொண்டு மாணவர்களுக்குஒருநாள் ''மணிவாசகரும் திருவாசகரும்'' என்ற தலைப்பில் பிரசங்கம் செய்தார். அப்பொழுது ''நரியைப் பரியாக்கி ஞாலமெல்லாம்நடத்துவித்து'' என்ற திருவாசகப்பாட்டை பாடிக்கொண்டே அழுதார். மாணவர்கள் ஏன் ஸார்! அழுகின்றீர்கள்? என்று கேட்டுக் கொண்டே தமிழ்ப் பண்டிதரைச் சூழ்ந்து கொண்டார்கள்; அவருக்கு மேலே பிரசங்கம் செய்யமுடியவில்லை. 15 நிமிஷங்கட்குப் பிறகு பண்டிதர், ''திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்றும் ''அழுதால் உன்னைப்பெறலாமே'' என்று அந்த மணிவாசகர் அழுதுதான் ''அருள்'' பெற்றார் என்றும் கூறிக்கொண்டு மீண்டும் தேம்பித் தேம்பி அழுக ஆரம்பித்தார். மாணவர்கட்கெல்லாம் பயம் வந்துவிட்டது.

பண்டிதர் கூறுவது மாணவர்கட்கு நன்கு புரியவில்லை. இன்றைக்கு பிரசங்கத்தை நிறுத்தி விடுங்கள் ஸார் என்று பண்டிதரைப் பணிவாக மாணவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இச்செய்தி ஹைஸ்கூல் முழுதும் பரவி விட்டது. எல்லா வாத்தியார்களும், ஹெட்மாஸ்டரும், மாணவர்களும் வந்து பண்டிதர் வகுப்பில் கூடிவிட்டார்கள். பண்டிதருக்கு அப்பொழுதுதான் ஹைஸ்கூலில் மாணவர்களிடையில் தனது வகுப்பில் பிரசங்கம் செய்து கொண்டிருப்பது ஞாபகத்திற்கு வந்தது. தனது வகுப்பில் ஏன் இவ்விதம் கூட்டம் என்று கேட்டார். ''ஒன்றுமில்லை, தமிழ் பண்டிதர்வாள்! தாங்கள்

தேம்பித் தேம்பி அழுதீர்களாம் ஏன் என்று கேட்க ஓடிவந் தோம்'' என்றார்கள். அப்பொழுது பண்டிதர் சிறிது காணத் துடன் தலையைக் குனிந்து கொண்டிருந்தார். அவர் வகுப்பு மாணவர்களும் பரிகாசத்துடன் பண்டிதரைப்பார்த்து கேலிச் சிரிப்பாகச் சிரித்தார்கள். மாணவர்கள் மனதுக்குள் பல சந் தேகங்கள் தோன்றின. கரி குதிரையாகுமா? மணிவாசகர் அரசன் குதிரை வாங்கக் கொடுத்த ரூபாயில் கோவில் கட்ட லாமா? பண்டிதருக்கு மட்டும் அழுகை வருவானேன்? மாண வர்களாகிய நமக்கு மட்டும் ஏன் அழுகை வரவில்லை? மேலும் அந்தையில் கூறுகிறபடி மணிவாசகர் அருள்பெற்று சோதியில் கலந்தார் என்றால் செத்துப்போ னார் என்றுதானே பொருள்? இதற்காக நம் பண்டிதர் ஆசைப் படுகிறார்?

இந்த மணிவாசகருக்கு எப்படி பாண்டிய அரசன் மந் திரி உத்தியோகம் கொடுத்தார்? நமது தமிழ்ப் பண்டிதர் ஏன் குடும்பஸ்தராக இருந்துகொண்டு இன்றும் கஷ்டப்படுகிறார். ஒன்று அவர் துறவியாகிவிட வேண்டும்; அல்லது நன்றாக முதலில் பண்டிதர் ஸைன்ஸ் (விஞ்ஞானம்) படிக்க வேண் டும். நமது பண்டிதருக்கும் பகுத்தறிவிற்கும் கொஞ்சம்கூட சம்பந்தமில்லையே! சைவ சமயப்பற்று மிகுதியால் மணிவாச கரிடமும் திருவாசக மீதும் கொண்ட மூட நம்பிக்கையால் அர்த்தமற்ற பக்தியால் 'அவன் அருள் பெறலாம்'' என்று அழுகிறார் என்று பலவாறு பேசினார்கள்.

இந்த தமிழ்ப்பண்டிதர் எப்படி ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதர் உத்தியோகம் பெற்றார் என்பதே நமக்குத் தெரிய வில்லை. அவர் மீது ஒன்றும் குற்றமில்லை. அவர் மூடநம் பிக்கையில் மெய்யாகவே கட்டுண்டு கிடக்கின்றார். மாணவர் களிடையில் பகுத்தறிவற்ற கதைகளைச்சொல்லி தேம்பித் தேம்பி அழுதுகொண்டு மூடநம்பிக்கைகளையும் பொய்க்கற்ப னைகளையும் ''சிவபெருமான் அற்புதம்'' என்றும் திருவிளை யாடல்'' என்றும் மாணவர்கள் நம்பும்படி புகட்டுவது மணி வாசகர்கட்கு பண்டிதர்கள் ''நஞ்சை'' ஊட்டுவதற்கொப் பாகும்.

பகுத்தறிவு வாதிகளே! கரி குதிரையாகுமா? குதிரை கரி யாகுமா? இத்தப்பித்தலாட்ட அற்புதங்களை (கடவுள்) ''சிவ பெருமான்'' செய்தார் என்பதை பகுத்தறிவுடனும் ஆராய்ச் சியுடனும் நம்புவீர்களா?

மாறிக் கொண்டிருக்கும் உலகம்.

மாறுதல் என்பது வாழ்க்கையின் இடைவிடாத அம்ஸமாகும். நாம் எல்லோரும் இதை அறிவோம். நேற்று இருந்ததைவிட சில விஷயங்களில் இந்த உலகம் நமக்கு மாறுதல் பெற்றவிடமாய் இருப்பதை நமது தினசரி வாழ்க்கையில் நாம் நன்றாய் அறிந்திருக்கிறோம். இந்த நாடக மாறுதல் இடைவிடாத ஒன்றாகும். இது ஒரு வருடமிருந்து மற்றோர் வருடத்திற்கும், ஒரு பத்தாண்டிலிருந்து மற்றோர் பத்தாண்டிற்கும், ஒரு தலைமுறையிலிருந்து மற்றோர் தலை முறைக்கும் போய்க்கொண்டே இருக்கிறது. இம்மாதிரி மாறுதலால் ஏற்படும் பலன்களை ஒவ்வொருவரும் செவ்வையாய் அறிவர். ஆனால், அதே சமயத்தில் அவைகளை உண்டாக்கிய மார்க்கத்தை அறிந்து கொள்வதில்லை.

இப்பிரபஞ்சத்தில் தன்னை சூழ்ந்துள்ள மூல வஸ்துக்களைக்கொல்லால் மனிதனின் அபார சக்தி நாயகமாய் நிற்பதற்கு வந்தனம் செலுத்துவோம். இருபது அல்லது முப்பது வருடங்கள் ஜீவியத்துடன் இருந்து அந்நாட்களையும், தற்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பானேயானால், குறிப்பிடத்தக்க மாறுதலை அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. பூமியின் சலனம் ஒவ்வொரு க்ஷணமும் இயங்கிக்கொண்டேயிருக்கிறது. ஆனால், வெளிச்சம், இருள் மாறுதலும், பகல் இரவு சீதோஷ்ண மாற்றமும் இல்லாமலிருந்தால் அச்சலனத்தை நாம் அறிந்து கொள்வது அசாத்தியம்.

இத்தன்மையில்தான் அபிப்பிராய மாற்றமும், இயக்கமும் இருக்கிறதென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. இவ்வாறே ஒரு பத்தாண்டில் கொழுந்து விட்டெரிந்த பிரச்சினை அடுத்த பத்தாண்டில் உயிரற்ற சாம்பலாய் போய்விடுகிறது. ஒரு தலைமுறையை திடுக்கிடச் செய்த, தன்வயப்படுத்திய எண்ணங்கள், அதற்கு அடுத்தாற்போல் வரும்

கர்ப்பகாலத்திய சுகாதார நிலை.

(டாக்டர் ஜி. கெனட்.)

நமது தேசத்திலே அநேக தாய்மார்களும் குழந்தைகளும் காலத்திற்கு முன்னமே மடிந்து போவதற்குக் காரணம் என்னவெனில் கர்ப்ப காலங்களில் கவனிக்க வேண்டிய சில காரியங்களை கவனிக்கத் தவறுவதே. அநேக தாய்மார்கள் முதற் குழந்தை கர்ப்பந்தரிப்பதினிருந்தே நெடுநாள் பிணியாளிகளாகி விடுகிறார்கள். கர்ப்ப காலங்களில் உண்டாகும் அநேக கெடுதிகள் தடுக்கக்கூடியனவைகள்தான். ஆகையால்

தலைமுறைக்கு சாரமற்ற, வீழ்ந்துபோன, லாபமற்ற எண்ணங்களாய் காணப்படலாம். இந்த உக்கிரமான மாற்றம், வித்தியாசமான பலனிர்பிரச்சினைகளை கொண்டுவருகிறது. அவற்றுள் சில நீண்ட காலத்திற்கு நிற்கின்றன, மற்றவைகள் கொஞ்சகாலத்திற்கே தாக்குப் பிடிக்கின்றன.

மாறுதல் அடையாமல் நிரந்தரமாய் ஒன்றுமில்லை என்ற உண்மையை பகுத்தறிவு வாதிகள் நன்கறிவார்கள். அவர்களுக்கும், மற்றெல்லோருக்குமே காலம் போய்க் கொண்டே இருக்கிறது, உலகமும் மாறிக்கொண்டே இருக்கிறது. எப்படியோ, எவ்வகையிலோ, அபிலாஷை ஒன்றை விட்டொன்றிற்குப் போய்க்கொண்டே இருக்கிறது. தற்கால தலைமுறையிலுள்ள ஆண் பெண்களுக்கு, சித்தாந்தங்கள், மத விவகாரங்கள் நாகரிகமற்றதாயும், முக்கியமில்லாததாயும் ஒவ்வொரு நாளும் தோற்றுகிறது. குருட்டாட்டம் புதை குழிக்குப்போய் விட்டது. புது விஷயங்கள் முன்னுக்குத் தள்ளிக்கொண்டுவந்து பெரிய கவனத்தை ஈர்த்துகிற்கின்றன. பகுத்தறிவு பிரசாரம் இப்போது நன்றாய் ஊன்றிவிட்டதுடன், நமக்கு சிந்தித்துப்பார்க்கும் உணவை தாராளமாய் ஊட்டிவிட்டது. சென்ற காட்களையும், எதிர் காலத்தையும் பார்த்து, மாறிக்கொண்டிருக்கும் உலகத்தை இப்போது சந்தியுங்கள்.

["ரிபாம்" பத்திரிகையிலிருந்து "தமிழ்முரசு"
மொழிபெயர்த்தது]

உதவி கிடைக்கக்கூடிய இந்தக் காலத்தில் அதைப்பெற்று நீடிய வாழ்வையும் சுகத்தையும் பெறாதது பெரிய தப்பிதமே.

முதலாவது நாம் தாராளமாக நமது நோவுகளைச் சொல்லி, உதவியையும் அனுதாபத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வைத்தியரை முன்னமே தேடி வைத்துக் கொள்வது மெத்தவும் நன்மையாயிருக்கும். நோத்திற்கு ஒரு புது வைத்தியரிடம் போவதும் கெடுதியே. நமது வியாதி அல்லது சரித்திரம் முதலியவற்றை காளடைவில் தெரிந்திருப்பது வைத்திய முறைக்கு அதிக உதவியாயிருக்கும்.

பிரசவத்திற்கு முந்தின மாதங்களிலேயே ஒரு வைத்தியரிடம் அடிக்கடி போக வர இருப்போமேயானால் கூபக்எலும்பின் அளவுகள் குறைந்திருப்பால் உண்டாகும் தடங்கலான பிரசவத்திற்கு உதவி பெற்றுக்கொள்வதுமல்லாமல், கர்ப்பகாலத்தில் சாதாரணமாக ஏற்படும் சரீர நஞ்சுப் பதார்த்தங்களினாலுண்டாகும் வியாதிகளையுந் தடுத்துக்கொள்ளலாம். அநேக சமயங்களில் இரத்தப்புண் நோவினால் கரு வளர முடியாமல் குறை மாதத்திலேயே அழிந்துபோவதும் அல்லது நிறைமாதமாகி செத்துப்போவதுமான இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்துகொள்ளலாம். மேலும் பிரசவ சமயத்தில் ஒரு பெண்ணுக்கு முக்கியமாக வேண்டிய பலனைச் சேர்த்துக்கொள்ள உதவி பெறலாம்.

ஒரு பெண், தான் கர்ப்பமாயிருப்பதைத் தெரிந்த முதல் மாதத்திலேயே ஒரு முறை சோதித்துக் கொள்வது மிகவும் நல்லது. ஏனெனில் சில சமயங்களில் கரு, கருப்பையில் தரிக்காமல் அதற்கு வெளியே அண்ட காளத்தில் தரிப்பதால் முதல் மாதத்திலிருந்தே வயிற்று நோவு ஏற்பட்டு, இரண்டு மாதம் முடிவதற்குள் விபாதி திட்டமாகக் கண்டுபிடிக்கப்படுமுன் மோசத்திற்குள்ளாக வேண்டியிருக்கிறது.

ஏழுமாதத்திற்குப்பின் இரண்டு வாரங்களுக்கொரு முறை பரிசோதித்துக்கொள்வது நல்லது. இந்தக் காலத்தில் தான் குழந்தையின் நிலை சரியாயிருக்கிறதாவென்று தெரிந்து கொண்டு அப்படி விபரீதமான நிலையில் அதாவது, குறுக்கு அல்லது புட்ட நிலையில் சிசு கிடக்குமாகில் அதைத் திருப்பி சரியான நிலையில் வைப்பதற்கு சாத்தியப்படும். அல்லாவிடில் கடைசி சமயத்தில் இப்படி விபரீதமான நிலையோடு பிரசவிப்பதினால் சிசுவின் உயிருக்கு மோசமுண்டாவதுமன்றி தாயும் அபாய ஸ்திதிக்கு ஆளாகிறாள்.

ஆகாரத்தைப்பற்றி கொஞ்சம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். தேவையான அளவு தேகபோஷணை தரக்கூடிய இலகுவான உணவை மிதமாய்ச் சாப்பிடவேண்டும். நமது தேசத்தில் ஒரு கெட்ட வழக்கமுண்டு. கர்ப்ப காலத்தில் ஒரு பெண் தனக்குப் பிரியமான எல்ல பதார்த்தங்களையும் சாப்பிட வேண்டும். இல்லாவிடில் குழந்தைக்கு காதில் சீழ் வடியும் என்பார்கள். கரு வளர்ந்து இரைப்பையை அழுத்தும் பிந்திய மாதங்களில்தான் விருந்துகள் சாபிட்டு, அஜீரணத்தை வர வழைத்துக் கொள்ளுகிறார்கள். அஜீரணத்தால் ஜன்னி ஏற் படுவது சகஜம். மாமிச வஸ்துக்களையும் தர்க்கியகரமான (Nitrogenous food) வஸ்துக்களையும் அதிகமாயுட்கொள் ளக்கூடாது. பழ வகைகளையும் காய் கறி பதார்த்தங்களை யும் சேர்ப்பதால் மலச்சிக்கலைத் தடுக்கலாம். ஏழு மாதத் திற்குப்பின் ஒரு முறை சாதம் உணவாகவும் மற்ற வேளை களில் லேசான ஆகாரமும் அதாவது பால், பழம் முதலிய வற்றை உண்ணுவதால் ஜீரணத்திற்கு லேசாக யிருப்பது மன்றி குழந்தையும் அளவிற்கு மிஞ்சி பெரிதாகவும் வளராது.

ஆகாரம் சாப்பிடுவது எவ்வளவு முக்கியமென்று நினைக் கிறோமோ, அதேபிரகாரம் ஏராளமான ஜலம் விசேஷமாக கர்ப்ப காலங்களில் குடிக்க வேண்டும். குடிக்கும் ஜலத்திற்கு தக்கபடி உடம்பிலுள்ள நஞ்சுப் பதார்த்தங்கள் நீரின் மூல மாக வெளியேறும். குடிக்கும் ஜலம் சுத்தமும் வடிகட்டினது மாயிருக்க வேண்டும். ஆற்று ஜலம் ஜனங்கள் குளிப்பதற்கும் துணிகளைத் துவைப்பதற்கும் உபயோகப்படும். குளம், கிணறு, குட்டை இவைகளின் ஜலம் சுத்தமல்ல. இவை வாந்தி பேதி, கரம்புச்சிலந்தி முதலிய வியாதிகளையுண்டுபண்ணும். இப்பேர்ப்பட்ட ஜலத்தை உபயோகிக்க அவசியமானால் வடி கட்டியபின் நன்றாக கிருமிகள் சாகத்தக்கதாக கொதிக்க வைத்தபின் ஆறவைத்துக் குடிப்பது நன்மையாக இருக்கும்.

அநேகருக்கு இந்தக் காலத்தில் மலச்சிக்கலிருப்பது சக ஜம். ஆனால் அதை கவலையினமாக விடுவது அதிக மோசத் திற்கிடமுண்டாக்கும். சரீரத்திலுள்ள விஷம் அல்லது அழுக்கு மூன்று விதமாக வெளியேறுகிறது. மலக்கழிவினா லேயும், நீரின் மூலமாகவும் தோலிலுள்ள சிறு துவாரங் களின் மூலமாய் வியர்வையின் மூலமாயும் வெளியேறுகிறது. ஆகையால் இந்த மூன்று பாதைகளையும் சுத்தமாக வைக்க வேண்டும். அநேகமாக, சரியான ஆகாரம் சாப்பிடுவதினா

லேயே இவற்றைச் சரியாக வைத்துக் கொள்ளலாம். போது மான பழுவர்க்கங்கள், காய்கறிகள், கீரை முதலியன சாப்பிடு வதாலும் ஏராளமான ஜலம் குடிப்பதாலும் மல ஜலக்கழிவு ஒழுங்காகிவிடும். அப்படியில்லாவிடில் லேசான பேதி மருந்து களை உபயோகிக்கலாம். ஆனால் கடுமையான மருந்துகளை உபயோகிக்கக்கூடாது.

கர்ப்பகாலம் அதிகப்படும்போது எல்லாக் கோசனங் களுக்கும் (System) பழுவு ஏற்படுகிறது. விசேஷமாகக் குண் டிக்காய்களுக்கு வேலை அதிகப்படுவதால் அநேக சமயங் களில் ஏழுமாதத்திலிருந்து குண்டிக்காய் வீக்கம் ஏற்படு வதால் நீரில் வெள்ளைத்தாது தோன்றும். இவ்வியாதி இருக் கிறதென்பதை சிறுநீர் கொஞ்சமாக இறங்குவதாலும் கண் பட்டையில் முதலாவது வீக்கம் ஆரம்பித்து உடம்பு முழு வதும் பரவுவதாலும், தலைவலி, மயக்கத்தாலும் அறியலாம். ஆகையால் இவ்வியாதி ஏற்படாவண்ணம் ஏழு மாதத்தி லிருந்தே இரண்டு வாரங்களுக் கொருமுறை நீரைச் சோதித் துக்கொள்வது நல்லது. மேலும் கர்ப்ப ஸ்திரீ சாதாரண மாகவே, அதிக ஜலம் அல்லது பார்லித் தண்ணீர் குடிக்கும் வழக்கத்தை வைத்துக்கொள்வது நன்மையாயிருக்கும்.

கழிவை வெளியேற்றுவதில் தோலும் ஓர் விசேஷித்த பாகமாயிருப்பதால் சரீரத்தைச் சுத்தமாக வைப்பது அவசி யம். தினந்தோறும் ஸ்நானம் செய்யும் வழக்கத்தை எப்போ தும்போல கையாடிவர வேண்டும். ஆனால் அதிகச் சூடான அல்லது குளிர்ந்த ஜலத்தை உபயோகிக்காமலிருக்கவேண்டும். ஏழு மாதத்திலிருந்து தொட்டியில் வெந்நீர் ஊற்றி அதில் உட்காரும் (sitsbath) வழக்கத்தைக் கொண்டாடுவது நன் மையாயிருக்கும். இப்படிச் செய்வது விசேஷித்த சிரமத்தை எடுத்துக்கொள்ளும் இடுப்பு நரம்புகள் தசைகள் முதலியவற் றிற்குப் பலனாக இருக்கும்.

கர்ப்பகாலத்தில் ஆடையைப்பற்றி, வெகு ஜாக்கிரதை யாக இருக்கவேண்டும். தற்காலத்தில் இறுக்கமான உடை களைப்போட்டு கெடுதியுண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். மார்பை இறுக்காமலும், இடுப்பைச் சுருக்காமலிருக்கும்படி யான உடைகளைத் தரிக்க வேண்டும். ஓட்டியாணங்கள், இடுப்பு காடாக்கள் முதலியவை முற்றிலும் விலக்கத்தக்கவை. சுத்தமானதும், இலேசானதுமான ஆடையாயிருக்க வேண்டும்.

ROJA MUTHIAH
47, HOSPITAL ROAD
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

ஸ்தானங்களைப்பற்றி ஒரு தாய் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கண்டசி மாதங்களில் முலைக்காம்பையிழுத்து குழந்தை எளிதில் பால் குடிக்கும்படியான நிலைமைக்கு கொண்டுவரவேண்டும். அதின் மேல் தோல் கடினமானால் தான் சுவைக்கும் காலத்தில் புண் ஏற்படாது. ஆகையால் அதைக் கடினமாக்கும்படி யூடிக்கலான் (Eudu-cologne) என்னும் வாசனைத்திராவகமும் ஜலமும் சமமாய்க்கலந்ததையாவது அல்லது போரிக் ஆஸிட் தூளும் (Boric Acid) ஜலமும் கலந்த திராவகத்தையாவது உபயோகப்படுத்தலாம். இக்காலத்தில் மார்பில் நசிவு ஏற்படுவதால் அடிகடி சுத்தம் செய்யாவிட்டால், அசுசி காம்பின் வழியாக மார்புக்குட் சென்று, மார்ச்சிலந்திகளுண்டாகின்றன. ஆகையால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று அறிகிறோம்.

சாதாரண ஒரு ஸ்திரீ கர்ப்பகாலத்தில் இரத்தம் குறைச்சலாவதால் நிறம் மங்கி வெளிறித்தோன்றுவாள். இது அதிகப்படுமேயாகில் சோகை வியாதிக்கு ஆளாவாள். ஆகையால் இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது பிரயோஜனமாக இருக்கும்.

தூக்கம் அத்தியந்த அவசியம். இரவில் 8 மணி நேரம் தூங்குவதோடு, பகலில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் அயர்ந்திருப்பது நரம்பு மண்டலத்திற்குத் தேவை.

கர்ப்ப ஸ்திரீ எந்தவிதான மனக்கவலை, துக்கம், கிலேசம், பயம் முதலியவற்றிற்கு இடம் கொடுக்கக்கூடாது. எப்பொழுதும் சந்தோஷமும் அழகானவைகளைக் காண்பதும் நினைப்பதும் கருஷிற்கு நல்ல வளர்ச்சியைக் கொடுக்குமென்று அநேக பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

எந்தக் காலத்திலும் சுகமாயிருக்கவேண்டுமானால் வீடு சுத்தமாயிருக்கவேண்டும். சாக்கடைத் தண்ணீர், குப்பை, எரு முதலியவை வீட்டு முற்றத்தில் சேராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

வீட்டறைகள் காற்றோட்டமுள்ளவைகளாகும், போதுமான வெளிச்சமுள்ளவைகளுமாயிருக்கவேண்டும்.

பகலில் ஜன்னல்களைத் திறந்து வைக்கவேண்டும். உள்ளே அடுப்பு, விளக்கு எரிக்கிறதினாலும், ஜனங்கள் கூடு

வதினாலும் கெட்ட காற்றழுண்டாகும். கெட்ட ஆகாயம் ஜன்னல்கள் வழியாய்ச் செல்லவும் கதவுகளின் வழியாய் சுத்த மான காற்று வரக்கூடியதாயுமிருக்கவேண்டும்.

ஒரு வீட்டிலுள்ள ஜனங்களின் ஆரோக்கிய நிலைமைக் குப்போதுமான சூரிய வெளிச்சம் தேவை ஆகாயம், வெளிச் சம், சூரிய வெப்பம் இவை மூன்றும் பூமியைச்சுத்தி செய்யக் கூடியவை. சூரிய வெளி சூக்ஷ்ம ஜீவராசி (Microbes)களை கொல்லும். குடியிருக்கும் வீடுகளில் அழுகிய காற்றுள்ள சகல வஸ்துக்களையும் காற்று சுத்தி செய்யும். ஆனதினால் பெரிய ஜன்னல்களும் கதவுகளும் வைத்து வீடு கட்டுவது நன்று.

பிரசவமென்பது ஒரு பெரிய தேக பரிசிரமம். ஆகலால் அதற்காக தேகத்தை தகுந்த பயிற்சியில் வைக்கவேண்டும். அதினால்தான் கூலி வேலை செய்து உழைக்கும் ஸ்திரீகள், உயர்ந்த நிலைமையிலிருந்து சுகஜீவனம் செய்கிறவர்களை விடக் குறைந்த கஷ்டத்துடன் பிரசவிக்கிறார்கள். ஆனால் அளவுக்கு மிஞ்சியதும் அதிக ஆபாசத்தைக் கொடுக்கக்கூடி யதுமான வேலைகளைச் செய்யலாகாது. பலத்திற்குத் தக்க அப்பியாசம் செய்வது நல்லது. கர்ப்பத்தின் கடைசி மாதங் களில் நீடித்து ரயில் பிரயாணங்களையும், கரடு முரடான பாதைகளில் வண்டியில் சவாரி செய்வதையும் விலக்க வேண் டும். விசேஷமாய் நின்றுவிட்ட மாதத்தீட்டு வரக்கூடிய தினங்களுக்கிணைந்த காலங்களில் மேற்கூறிய பிரயாணங் களை விலக்கவேண்டும். கடைசி மாதங்களில் தினம் ஒன்று அல்லது இரண்டு மைல் நடப்பது ஒரு நல்ல அப்பியாசமாக இருக்கும்.

நமது தேசத்தில் விசேஷமாக நாம் எதிர்பார்க்கும் காலத் திற்காக ஆயத்தப்படுவது வெகு அபூர்வம். நாம் காத்திருக்கும் குழந்தைக்காக உடுப்புகள், படுக்கை முதலியவற்றை முன் னமே தயார் செய்து வைப்பது அதிக உதவியாக இருக்கும். அல்லாவிடில் பிறந்திருக்கும் சிசுவிற்கு சரியான ஆடையில்லா மல் ஆரம்பத்திலிருந்தே பலவித நோய்க்குள்ளாகி காலமெல் லாம் பலவீனமாயிருக்கும்.

மேலும் நாம் பயத்தோடும் கவலையோடும் எதிர்பார்க் கும் பிரசவ நேரத்தை லேசாகும்படி அந்த சமயத்திற்காகவும் ஆயத்தம் செய்து கொள்ளுகிறதில்லை. வீட்டில் பிரசவத்தை

வைத்துக் கொள்பவர் எவ்வளவு பெரிய உத்திரவாதத்தைக் கொண்டிருக்கிறார்களென்று உணருகிறதே இல்லை. கவலை யீனமாக இந்தச் சமயத்தை கடத்திக்கொள்பவர்களில் அநேகர் மோசத்துக்குள்ளாவதை நாம் பார்க்கிறோம். அந்தச் சொற்ப நாட்களில் வசதிக்குறைவை நாம் பாராமல் அந்தச்சமயத்தில் ஓர் ஆஸ்பத்திரியில் போய் பிரசவிப்பது கவலையையும் பயத்தையும் ஒருவாறு நீக்குவதுமல்லாமல், அதால் நேரிடக்கூடிய பல விதமான நோய்களுக்கும் கஷ்டங்களுக்கும் நீங்கியிருப்போம்.

(தமிழ்முரசு)

—(O)—

மதிப்புரை.

"ஆனந்தபோதினி"

சென்னை தோழர் என். முனிசாமி முதலியாரவர்களால் வெளியிடப் பெறும் மாத வெளியீடாகிய "ஆனந்த போதினி"யின் இதழ் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம்.

இது தமிழ் மக்கள் நலங்கருதி 22 வருஷங்களாக உழைத்து வரும் ஒரு சிறந்த மாத வெளியீடு. இதில் அரியபல ஆராய்ச்சிகளும், பாடல்களும், செய்திகளும், அழகிய கதைகளும், சரித்திரக் குறிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன. இப்பத்திரிகையை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டியது நீங்காக்கடமையாகும்.

சந்தா விபரம்.

உள்நாடு வருஷம் சந்தா ரூ. 1—0—0

வெளிநாடு ஷை ரூ. 2—0—0

கிடைக்குமிடம்:—

என். முனிசாமி முதலியார்,
"ஆனந்த போதினி" ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்

நாகரீகமற்ற பழக்கவழக்கங்கள்.

பாதிரி அர்ஸனே அர்குவிடில், வடக்கு கானடாவில் பனிக்கட்டி உறைந்து கிடக்கும் பிரதேசத்திலுள்ள எஸ்கிமோ ஜாதியினரிடம் நெருங்கிய பழக்கமுள்ளவர். அவர் எஸ்கிமோ ஜாதியினரின் நாகரீகத்தைக் குறித்தும், அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் குறித்தும் கீழ் வருமாறு கூறுகிறார்:--

இறந்ததும் சுவர்க்கத்திற்குப் போவதைவிட, நரகத்திற்குப்போவதே சிறந்ததென்று எஸ்கிமோ ஜாதியார் கூறுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் நரகத்தைப் பற்றிப் பார்க்கும் படங்களின் மூலம், நெருப்பும் உஷ்ணமும் நரகத்தில் அதிகமாயிருக்கு மென்பதுதான். இப்பிறப்பில் அவர்கள் குளிரில் அவஸ்தைப் படுகிறார்கள். ஆனபடியாலேயே சுவர்க்கத்தைவிட உஷ்ணம் மிகுந்த நரகமே மேலென்று கருதுகிறார்கள்.

கடவுளிடம் அவநம்பிக்கை

கடவுள் அன்பு நிறைந்தவரென்று கூறினால் எஸ்கிமோ ஜாதியினர் நம்புவதில்லை ஏனெனில் இயற்கையில் எத்தகைய அன்பையும் அவர்கள் கண்டதில்லை. பிறந்தது முதல் இறக்கும் வரையில் குளிரின் கொடுமையையும், உணவு தேடப்படும் கஷ்டத்தையுமே காண்கிறார்கள். கடவுளுக்கு தங்களிடம் அன்பிருக்குமாகில், இக்கஷ்டம் தங்களுக்கு ஏனிருக்க வேண்டுமென்கிறார்கள்.

எஸ்கிமோ ஜாதியினர் மனைவிகளைப் பரிவர்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் வெள்ளைக்காரர்களில் அநேகருடைய ஒழுக்கத்தைவிட, இவர்கள் ஒழுக்கம் சிறந்ததென்றே கூறுகிறவர்களுண்டு.

மனைவிக்கு புது புருஷன்

ஒரு எஸ்கிமோ. வேட்டர், தன் மனைவியை மற்றொருவரிடம் ஒப்புவிக்கிறார். பிறகு இவர் வேட்டைக்குப் போகி

றார். இம்மனைவி தன் புருஷன் வேட்டையிலிருந்து வரும் வரையில், தன்னை ஒப்படைக்கப்பட்டவருடன் புருஷன் மனைவியாக வாழ்கிறாள். ஆனால் புருஷன் வேட்டையிலிருந்து திரும்பியதும் அவனுடன் போய் விடுகிறாள். இது எஸ்கிமோ ஜாதியினரிடமிருக்கும் நீண்டகால வழக்கம். இது தீய வழக்கமென்றோ, அன்றி ஒழுக்கக் குறைவென்றோ நீக்கிரோவர் நினைப்பதில்லை.

தற்கொலை

தற்கொலை செய்து கொள்வதும் எஸ்கிமோ ஜாதியினருக்கு தீய வழக்கமாகத் தோன்றுவதில்லை. ஆனால் அவர்கள் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டோ அன்றி செய்த குற்றத்திற்குக் கிடைக்கும் தண்டனைக்கு அஞ்சியோ தற்கொலை செய்துகொள்வதில்லை. ஒரு எஸ்கிமோ நோயுறுகிறான். இனி அவன் பிழைப்பது கஷ்டமெனத் தெரிந்ததும், அவன் தற்கொலை செய்துகொண்டு செத்துவிட அனுமதித்து விடுகிறார்கள். எப்படியும் இவன் செத்தாகவேண்டும், அதற்கு கௌரவமான வழி தற்கொலை தான் என்று கருதுகிறார்கள்.

பனிப் பாறைகளில், எங்கும் குளிர் மயமாயிருக்குமிடத்தில் ஆகாரத்திற்காக வேட்டையாடுவது மிகக்கஷ்டம். பல தினங்கள் வேட்டையாடினாலும் சில சமயங்களில் எதுவும் கிடைப்பதில்லை. பிறகு உணவுக்கு என்ன செய்வது?

உணவின்றி சாவு

கிழவர்கள் இன்றில்லாவிடிலும் இன்னும் கொஞ்ச காட்களில் சாக வேண்டியவர்கள். அவர்களும் உயிருடனிருப்பதாயிருந்தால், கையிலிருக்கும் உணவும் மற்றவர்களுக்குப் போதாமல் போய்விடும். ஆகையால் கிழவர்களைத் தானே உணவின்றி செத்துவிடும்படி விட்டு விடுகிறார்கள்.

வீட்டிலுள்ள கிழத்தாய் தான் முதலில் சாகத்துணிந்து, வீட்டிலிருக்கும் கொஞ்ச ஆகாரத்தை மற்ற இளைஞர்கள் புசித்து வாழ அனுமதிப்பது வழக்கம்.

கிழவரை கொல்கின்றனர்

உடனே கல்ல வேட்டை கிடைக்குமிடத்திற்குப் போக எல்லாவற்றையும் கட்டி எடுத்துக்கொண்டு புறப்படும்படி

ஆண்கள் பெண்களுக்கு ஆக்ஞாபிக்கிறார்கள். பணிக்கட்டிக் குடிசையை உடனே காலி செய்து விடுகின்றனர்.

பிறகு கிழவர்களை உள்ளே போட்டு வாசலிலும் பனிச் சுவர் எழுப்பி விடுகின்றனர். இக்கிழவர்களுக்கு அவர்களுடைய கம்பினிச்சட்டையையும், சிறிது உணவையும், தீபத்தையும் கொடுக்கின்றனர்.

பின்னர் கிழவர்கள் உள்ளே யிருந்தே காளாவட்டத்தில் சாக விட்டுவிட்டு மற்றவர்கள் வேறு இடத்திற்குக் குடி போய் விடுகிறார்கள்.

ஆகாரம் கிடைத்தால்?

இப்படிப் போகிறவர்களுக்கு சமீபத்திலேயே ஆகாரம் கிடைத்து விடுமாகில் உடனே திரும்பி அடைபட்டுக்கிடக்கும் கிழவர்களைக் காப்பாற்றி விடுகின்றனர். இக்கிழவர்களின் புத்திரர்களுக்கு ஆகாரம் கிடைத்தால், இவர்கள் தான் தங்கள் பெற்றோர்களைக் காக்க முதலில் விரைந்தோடுகிறார்கள்.

எஸ்கிமோ ஜாதியினர் வசிக்குமிடங்களில் சில விடங்களில் அங்கு ஒவ்வோர் ஆணுக்கும் பல மனைவிகள். பலதாரமணம் கூடாதென்றாலும் அதிகப்படியாயிருக்கும் பெண்களை என்ன செய்வது? இவர்களும் உயிர் வாழ்ந்து, அதற்கு வேண்டிய ஆகாராதிகளைத் தேடித்தரும் புருஷர்களை அடைய வேண்டாமா?

ஒரு பெண்ணுக்கு 3 புருஷர்

சில பாகங்களில் பெண்கள் மிகக் குறைவாயிருக்கிறார்கள். அங்கு மேற்கண்டதிற்கு மாறுபட்ட நிலைமையிருக்கிறது. ஒரு பெண்ணுக்கு 2 அல்லது 3 புருஷர்களுமிருக்கலாம். எல்லோரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறார்கள். ஒவ்வோர் ஆணுக்கும் மனைவி அவசியமாகிறது. போதிய பெண்களில்லாவிட்டால், ஒரே பெண்ணுக்குப் பல புருஷரிருப்பதை விட வேறு வழிதான் என்ன? (ஜ-கா)

"தெய்வ மாடல்"

(எம். சிங்காரவேலு எழுதியது.)

குடங்கணைச் சிங்காரித்து அவைகளை தலைமேலேக் திக்கொண்டு அதற்குக் "காகம்" எனப் பெயரிட்டித் தெருக் களில் ஆடித்திரியும் வேடிக்கையை நமது நாட்டில் அன்றா டம் பார்க்கலாம். அதனுடன் "தெய்வம்" ஆடிவதுமுண்டு. தெய்வம் ஆடிவதென்றால் ஒரு புருஷனோ, பெண்ணோ தன் மேல் 'சாமி' வந்ததாகச் சாதாரண ஸ்மரணையை மறந்து, வேறுவிதமாகப் பேசுவதும் ஆடிவதுமான காட்சி "சாமி ஆடல்" அல்லது "தெய்வமாடல்" என வழங்கும் இவ்வித மாக சில மனிதர்கள் கூடிப்பதை மெஞ்ஞானத்தில் (Artificial Hysteria) அதாவது தானே வரவழைத்துக்கொண்ட ஓர்வித வெறி என்பார். சாதாரண Hysteria வில் மூர்ச்சை ஏடக்கி வலிவருவதுண்டு. காக்காய் வலி என்ற நோவும் இந்த நரம்பு நோயைப்பற்றியதே. அதே மாதிரியாகவே ஒருவன் தானா கவே இவ்வித வலியை வரவழைத்துக் கொள்ளலாம். இவ்வித வலியைத்தான் நமது நாட்டுப் பாமர ஜனங்கள் "சாமி ஆடு கிறது" "சாமி பேசுகிறது" "சாமி மூர்ச்சித்தது" "சாமி மலைசாய்த்து விட்டது" என்று பய பக்தியோடு சொல்கின் றனர். இந்த வலியை வரவழைத்துக் கொள்வதற்குத் தகுந்த ஆடம்பரங்கள் செய்வதுண்டு. உறுக்கை, சிலம்பு, காகம், வேப்பிலை, மேளம், தாளம், விபூதி, மணி முதலிய Accompaniments ஆடம்பரங்கள் கூடவே இருக்கின்றன. இத்தியாதி ஆடம்பரத்தில் சில நரம்பு வியாதியுடையோர் எளிதில் ஓர்வித மயக்கம் (Irance) அடைகின்றனர் இவ்வித வலியில் Excitement விழுந்தோரை ஆயிரகணக்காக பார்க்க வேண்டுமானால் அல்லாசாமி பண்டிகையில் 'ஆலி' 'ஜூலை' என்ற சப்தத்திற்கு ஏற்றவாறு சிறிய பையன்களும் (Work themselves into Hysterics) இந்த மயக்கத்தை வர வழைத்துக் கொள்கின்றனர். அவர்கள் மேல் மஞ்சள் சாம்பி ராணி தூளை வாரி வாரி எறிகின்றனர். அல்லாசாமி கோஷ் டத்தில் யாருக்குத்தான் இவ்வித வலிவுண்டாகாமல் இருக் கும்? ஒருவனைப் பார்க்க மற்றொருவனுக்கு தொத்து வியா தியைப்போல் (Infectious disease) இந்த 'வலி' தொத்திக்

கொள்வதுண்டு. அதே மாதிரியாகவே இந்தப் பண்டிகையில் மாரடித்துக்கொள்ளும் பயங்கரமான காட்சி யொன்றுண்டு. மூடநம்பிக்கையால் தங்களை மறந்து (Religious excitement) மதவெறியால் தூண்டப்பட்டு, இரத்தம் ஓழுக மாரை அடித்துக் கொள்ளுகின்றனர். ஓருவன் தானே கோபத்தை வரவழைத்துக்கொண்டு தன்னையே அடித்துக்கொள்ளும் பாவனையை யொத்தது இவ்விந்த 'தெய்வ மாடலும்' 'சாமி ஆடலும்' மாரடித்துக் கொள்ளலும் என அறிக. இந்த விபரீத (Abnormal) நிலைமையில் உளறும் சொற்களை தெய்வவாக்கென நம்புகின்றார்கள்.

உண்மையாகவே ஓருவனுக்கு ஜன்னிநோய் பிறந்தால் தாருமாறாக அவன் உளறுவான். இவ்விந்த உளறலை பேயின் வாக்கெனக் கொள்ளுவது முண்டு. காட்டுமிராண்டி நிலைமையில் திற்கும் கூட்டங்களில் ஜன்னி கண்டவனை அடித்துக் கொன்றுவிருக்கிறார்கள். ஆனால் தானே 'ஜன்னி'யை உண்டாக்கிக்கொண்டு உடுக்கை, சிலம்புகளுக்குத்தக்கபடி ஆடிக்கொண்டு தாருமாறாக உளறுவானேயாகில் அதனைத் தெய்வ வாக்காகக் கருதி அதன்படி நடக்க எத்தனிக்கின்றார்கள். 'அம்மா ஆடு கேட்கின்றாள்' என்றால் ஆடுகளை காவு இடுகின்றார்கள் 'கோழி கேட்கின்றாள்' என்றால் கோழி காவு கொடுக்கின்றார்கள். இவ்விதமாக சில கொடூர செய்கைகளையும் 'அம்மா' சொன்னாளெனவும், 'சாமி' சொல்லிற்று எனவும் நம்பி செய்து விடுகிறார்கள். இத்தியாதி கொடிய மூடநம்பிக்கையால் சில இடங்களில் கொலைகளும் நடந்திருப்பதைப் படிக்கின்றோம். நான் இருக்கும் மீன்பிடிக்கும் குப்பத்தில் 40-வருஷத்திற்கு முன்பு எங்கள் பந்துக்களில் ஓரு பெண்ணானவள் பிள்ளை பெற்ற பிறகு சரியான சிகிச்சையின்றி ஜன்னி (Tetanus) பிறக்கவும் அவளுக்குப் பேய் பிடித்துக்கொண்டதென்று 'தெய்வம் வந்தவள்' சொன்னதாக செருப்பாலும் முறத்தாலும் அந்த நோயாளியை அடித்துக் கொன்றார்கள். அதே மாதிரியாகவே நோயில் மெலிந்த பெண்களை 'தெய்வம்' ஆடுகின்றவள் சொல்லைக்கேட்டு கடலில் முழுக வைப்பதும் 'தெய்வம் ஆட' வைப்பதும், அடி தண்டமிட்டு நடக்கச் சொல்வதும், உடுக்கை சிலம்புடன் வெகு தூரம் நடந்து பிரார்த்தனை செலுத்துவதுமான கொடுமையான வேலைகளைச் செய்யச் சொன்னதின் பயனாக எத்தனை சிறுபெண்கள் மாண்டனர்! இத்தியாதி கொடிய பழக்கங்கள் மூடபக்தியால் நேரிடுவதைக் கண்டறிந்து அதனைப்போக்கும் நல்ல வழிகளைத் தேடாமல் 'சிவ-

சிவ' என்று முணுமுணுப்பதும் 'ஆன்மா' உண்டா என்று வீண்வாதம் மிடுவதும் 'கர்மம்' உண்டா என்று வாதிப்பது மான பயனற்ற செயல்களைச்செய்து காலம் கழிப்பதா மானுஷீக மெனக் கேட்கின்றேன்.

சைவ கூட்டங்களிலும், வைணவ கோஷ்டியிலும், கால க்ஷேபங்களிலும், கிறிஸ்துவ சபைகளிலும், புத்த கூட்டங் களிலும் நமது புத்திக்கு எட்டாத கற்பனைகளைப்பற்றிப் பெரி வாதித்து வீண் காலத்தைக் கழிக்கின்றனரே யொழிய மற்றபடி உயிரை இவ்வுலகில் வீணே மடியாமல் செய்வதற்கு வேண்டிய பரிகாரங்களைத் தேடி உழைக்காத காட்சியைக் காண மனம் புண்படுகிறது.

தர்ப்பழக்கங்களால் மடியும் மக்களுக்கு நமது நாட்டில் கணக்கே இல்லை. எத்தனை குடும்பங்கள் இதியாதி மூட நம்பிக்கையால் நாசமடைந்தன! காட்டு மிராண்டிப் பழக்கங்கள் (Savage practices) காகரீக மற்ற வழக்கங்கள் (Barbarous Customs) உலகமெங்கும் அங்குமிங்கும் பரவி இருந்தபோதி லும், நமது இந்திய நாட்டில் மாத்திரம் இக்கொடிய மூடப்பழக்க வழக்கங்கள் அதிகமாக நிறைந்துள்ளன. அநாசங்களும் இம் மூட வழக்கங்களுக்கு ஜாடையாகவே இருந்து வருகின்றது. கடுமையான சட்ட திட்டங்களால் இம்மகா பாதகங்களைத் தடுப்பதைக் காணோம். இதற்கொரு காரணமுண்டு. அது யா தெனில் இம்மூடப்பழக்கங்களை மதச்சார்பாக அனுஷ்டித்து வரு வதால் மத நடு நிலைமை (Religious Nuetrality) என்ற மூடத் திட்டத்திற்கு விரோதமாகாமல் பார்க்கின்றனர். 'சதி' (Suttee) என்னும் தர்ப்பழக்கத்தைச்சட்ட திட்டத்தால் நிறுத்தினார்கள். (அதாவது உடன்கட்டை ஏறுவதை சென்ற 100-வருஷத்திற்கு முந்தியே தடுக்கப்பட்டது) என்—தெய்வமாடுவதையும், காவு கொடுப்பதையும், விஷம் உண்ணுவதையும், கரகமாடுவதையும், குறி சொல்லுவதையும், கைபார்ப்பதையும் 'ஆவிஜூலா' வென்று மூர்ச்சித்துப்போவதையும்' மந்திர தந்திரங்கள் செய்வதையும், பில்லி சூனியம் வைப்பதையும் (Witch-craft) நல்ல சகுனம், கெட்ட சகுனமென்பதையும் சட்ட திட்டங்களால் நிறுத்தலா காது? உடன் கட்டை ஏறுவது எகாதேசம். ஆனால் சரி யான சிகிச்சையின்றி இந்தக் 'கும்பம்' போடுவதினாலும், தெய் வமாடுவதினாலும், மந்திரம் செய்வதினாலும் மடியும் ஏழை மக் கள் ஆயிரக்கணக்கென்று சொல்லலாம்! இதனைத் தடுப்பார் இவ் வுலகில் (இந்தியாவில்) யாருமில்லையா! சுயமரியாதையோருக்கு இதைவிட முக்கிய வேலை என்ன இருக்கிறது!

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)⇨(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0
கடவுள் ... ... ,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0
வால்ட்டேர் ... ... ,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு ... ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0
ஷ 2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு Or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0
ஷ 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண் உரிமையும் மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”) ... ,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

“விடுதலை”

(காலணா தினசரி)

பார்ப்பனரல்லாத தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக பெருத்த நஷ்டங்களுடனும், கஷ்டங்களுடனும் ஆரம்பித்திருக்கும் ஒரு சிறந்த தமிழ் தினசரிப் பத்திரிகை.

இதன் ஆசிரியர் பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

தேசத்தின் பேரால் அன்றாடம் நடந்து வரும் பார்ப்பன சூழ்ச்சியும், காங்கரஸ் புரட்டும் அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் “விடுதலை” அவசியம் இருக்க வேண்டும். இந்து பார்ப்பன ஆதிக்கத்தை அச்சமின்றி ஆணித்தரமாய் வெளிப்படுத்தும் பத்திரிகை இது ஒன்றே யாகும். பெருத்த நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்குமிடையில் இப்பத்திரிகை நடத்தப்படுவதால் தமிழ் மக்களான அபிமானிகளும் ஆதரவாளிகளும் பத்திரிகை வளர்ப்புக்கு தங்கள் தங்களால் கூடியதான கண்கொடையும் ஆதரவும் அளிக்க வேண்டியது கடமையும் அவசியமுமாகும்.

சந்தா விவிதம்.

தபால் மூலம் முன் பணமாக

ஒரு வருடத்திற்கு 7—8—0 6 மாதத்திற்கு 4—0—0
3 மாதத்திற்கு 2—0—0 ஒரு மாதத்திற்கு 0—11—0

ஏஜண்டுகள் உள்ள இடத்தில் பத்திரிகை 1-க்கு விலை காலணா.

ஏஜன்ஸியாக இருக்க ஆசைப்படுபவர்கள் 25 ரூபாய் டிபாசிட் கட்ட வேண்டும்.

கமிஷன், மற்று தெரிவிப்பு வரை பத்திரிகை 1-க்கு 1 தம்பிடி.
தினம் 100 பத்திரிகை விற்றால் தினம் 8 அணா ஆதாயம்.

விலாசம்:—

மானேஜர், “விடுதலை” ஈரோடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1 —8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

அறிவின் செயல் (பாட்டு) (அ. சிதம்பரநாத பாவலர்)	1
நல்வழி எது? (இங்கர்சால்)	3
மாணவரும் பர்னாட்ஷாவும்	9
ஜோஸப் ஸ்டாலின் (சி. வி கே.)	15
நான்கு வேதங்களின் வரலாறு	23
ஆண்டாள், சீதை தெய்வங்களா? (அ. பொன்னம்பலனார்)	28
சுயமரியாதை இயக்கம் (ஈ. வெ. ராமசாமி)	34
நரியைக் குதிரையாக்கிய அற்புதம் (அம்பலவாணன்)	46
மாறிக்கொண்டிருக்கும் உலகம்	49
கர்ப்ப காலத்திய சுகாதார நிலை (டாக்டர் ஜி. கெனட்)	50
நரமாம்ச பக்ஷிணி மனிதர்கள்	57
"தெய்வ மாடல்" (எம். சிங்காரவேலு)	60

10-7-37-ந் தேதியன்று முடிவெய்திய மாயவரம்

தோழர் சி. நடராஜன் அவர்கள்.